## முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனி திங்கள் 9 ம்நாள்)

**அசல் வழக்கு எண்.19/2018**
(CNR No.TNED01-000046-2018)
மற்றும்
**அசல் வழக்கு எண்.306/2019**
(CNR No.TNED01-001530-2019)
(அ.வ.எண்.222/2010, சார்பு நீதிமன்றம், பெருந்துறை)

**அ.வ.எண்.19/2018**
விஜயபுரி (எ) மணி. .. வாதி

// எதிர் //

1. பூங்கொடி (எ) வசந்தி
2. ருக்மணி
3. தனலட்சுமி .. பிரதிவாதிகள்

**அ.வ.எண்.306/2019**
(அ.வ.எண்.222/2016, சார்பு நீதிமன்றம், பெருந்துறை)
1. பூங்கொடி (எ) வசந்தி
2. ருக்மணி
3. தனலட்சுமி .. வாதிகள்

// எதிர் //

1. பெரியண்ண கவுண்டர் (இறந்துவிட்டார்)
   (இ.ம.எண்.4/2024 ல் 09.01.2025 ம் தேதிய உத்தரவுபடி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)
2. விஜயபுரி (எ) மணி .. பிரதிவாதிகள்

ஆரம்பத்தில் அ.வ.எண்.306/2019 ன் வாதிகள் பெருந்துறை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.222/2010 வழக்கை தாக்கல் செய்து கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்து, வழக்குரை திருத்தம் செய்யப்பட்ட பிறகு பண ஆள்வரைக்காக வழக்குரை

திருப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.306/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அ.வ.எண்.19/2018 வழக்குடன் ஒருசேர இணைந்து நடத்த உத்தரவிடப்பட்டு, மேற்படி இரண்டு வழக்குகளும் இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.03.2026 ம்தேதி இறுதியாக ஒருசேர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அ.வ.எண்.19/2018 ன் வாதி மற்றும் அ.வ.எண்.306/2019 ன் 2 ம் பிரதிவாதி தரப்பில் திரு.பி.திருமலைராஜன், வழக்கறிஞர் அவர்களும், அ.வ.எண்.19/2018 ன் பிரதிவாதிகள் மற்றும் அ.வ.எண்.306/2019 ன் வாதிகள் தரப்பில் திரு.ஏ.சி.முத்துசாமி, வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், அ.வ.எண்.306/2019 ன் 1 ம் பிரதிவாதி இறந்துவிட்டதாலும், இருதரப்பு வாதுரைகளை ஒருசேரக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## <u>பொது தீர்ப்புரை</u>

### <u>அ.வ.எண்.19/2018:-</u>

வாதி தாவாச் சொத்தின் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்யக் கோரியும், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவரும் தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் இடையூறு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியும் மற்றும் வாதியின் இவ்வழக்குச் செலவுத் தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப் -பட்டுள்ளது.

2. <u>அ.வ.எண்.19/2018 ன் வழக்குரையின் சுருக்கம்:</u>

வாதி மற்றும் பிரதிவாதிகள் பெரியண்ண கவுண்டரின் மகன் மற்றும் மகள்கள். தாவா 1 ம் அயிட்ட சொத்தை வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் வழிப் பாட்டனாரான ரங்கைய கவுண்டர் 07.06.1908 ம்தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் மூலம் கிரயம் பெற்றார். அவர் இறப்பிற்கு பிறகு அவரின் ஒரே மகனான பெரியண்ண கவுண்டர் அனுபவித்து வந்தார். தாவா 2 ம் அயிட்டச் சொத்து வாதி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களாகும். மற்ற கூட்டு பங்குதாரர்களுடன் பிரிவினை செய்து கொள்ளாமல் கூட்டாக அனுபவித்து வந்து, 12.02.1964 ம் தேதியில் பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் மேற்படி சொத்தைப் பிரித்துக் கொண்டதில் 'பீ' ஷெட்யூல் சொத்தாக பிரிந்தது. பின்னிட்டு கூட்டுப் பங்குதாரர்களுக்குள் சொத்தை அனுபவிப்பதில் கஷ்டங்கள் ஏற்பட்டதால்

பஞ்சாயத்து நடைபெற்றது. அதன்படி வண்டித்தடம், பாசன பாத்தியங்களில் இருந்த அனுபவ கஷ்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டி 30.01.1994 ல் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் எழுத்துமூலமான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். தாவா 3 ம் அயிட்டச் சொத்தில் புல எண்.100 ன் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.11.82 பூமியை வாதியின் தகப்பனார் பெரியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவரின் அனுபவத்தில் இருந்தது. அதில் பாதி பங்கு மூன்றாம் நபர்களுக்கு விற்கப்பட்டுவிட்டது. மேற்படி புல எண்.100 ல் பு.ஏ.11.82 விஸ்தீரணத்தை வாய்மொழியாகப் பிரித்துக் கொண்டார்கள். அதில் வாதியின் தாத்தா ரங்கைய கவுண்டருக்கு ஒரு பகுதியும், ராமசாமி கவுண்டர் மற்றும் பலருக்கு ஒரு பகுதியும் எடுத்துக் கொண்டார்கள். 1958 ம் வருடத்தில் மேபுறம் பாதி வாதியின் முன்னோர்களுக்கும், கிழபுறம் பாதி ராமசாமி கவுண்டர் மற்றும் மற்றவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. மேற்படி ராமசாமி கவுண்டர் மற்றும் பலர் புல எண்.100 ல் இருந்த தங்கள் பங்கை குப்பண கவுண்டர் என்பவருக்கு விற்றுவிட்டார்கள். மேற்படி குப்பண கவுண்டர் ஒரு வேலம்மாள் என்பவருக்கு கிரயம் கொடுத்து பின்னிட்டு அதை ஒரு திரும்ப பெற்றுக் கொண்டார். மேற்படி குப்பண கவுண்டர் மற்றும் அவரது மகன்கள் கடந்த 19.05.1972 ம்தேதி ஒரு சின்னமுத்துசாமி கவுண்டர் மற்றும் குழந்தாயம்மாள் ஆகியோருக்கு விற்றுவிட்டார்கள். மேற்படி சின்னமுத்துசாமியும், குழந்தாயம்மாளும் கடந்த 12.07.1982 ம்தேதி சொத்துக்களைப் பிரித்துக் கொண்டார்கள். பின்னிட்டு மேற்படி நபர்களும், சின்னசாமியும் 21.01.1987 தேதியில் வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் பெரியண்ண கவுண்டருக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள். மேற்படி 21.01.1987 தேதிய கிரயப் பத்திரத்திற்குண்டான மறுபயன் முழுவதையும் வாதி செலுத்தினார். மேற்படி பெரியன்ண கவுண்டரும், அவரது தகப்பனார் ரங்கைய கவுண்டரும் மேற்படி சொத்துக்களை வாடகைதாரர்களுக்கு கொடுத்து பின்னிட்டு அதை திரும்ப பெற்றுக் கொண்டு அனுபவித்து வந்தார்கள். புல எண்.100 ல் உள்ள மொத்த விஸ்தீரணம் புஞ்சை ஏக்கர் 11.74 முழுவதும் வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டுள்ளது.

3. தாவாச் சொத்துக்கள் அனைத்தும் வறண்ட மானாவரி பூமிகள், அதிலிருந்து வருமானம் எதுவும் இல்லை. தாவா 2 ம் அயிட்டச் சொத்தில் மட்டுமே விவசாயம் மூலம் வருமானம் இருந்து வந்தது. மேற்படி வருமானமும் குடும்பத் தேவைகளுக்கே போதுமானதாக இருந்து வந்தது. பிரதிவாதிகள் திருமண பருவத்தை அடைந்திருந்தால் வாதி தன்னுடைய இளைய வயதிலேயே தொழில் செய்ய வேண்டிய நிலைக்கு

தள்ளப்பட்டு, வாதி மாட்டு வியாபாரத்தை சிறிதாக ஆரம்பித்து பல சந்தைகளுக்குச் சென்று வியாபாரம் செய்து பண்ணை ஆரம்பித்தார். வாதி மாடுகள், எருதுகள், சேவல் மற்றும் கோழி வியாபாரத்தை செய்து வந்ததால் வாதியை மாட்டு வியாபாரி, கோழி வியாபாரி என்று அடையாளம் சொல்லப்பட்டு வந்தார். பக்கத்து மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வந்து வாதியிடம் கோழி வாங்கிச் சென்றதால் வாதிக்கு கோழி வியாபாரத்தில் நல்ல வருமானம் இருந்து வந்தது. வாதியின் தனிப்பட்ட வருமானத்தை வைத்துதான் புல எண்.100 ல் பாதி விஸ்தீரணத்தை ஒரு குழந்தாயம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றார்கள். வாதியின் தனிப்பட்ட வருமானத்தைக் கொண்டு மறுபயன் கொடுக்கப் -பட்டிருந்த போதிலும் வாதியின் தகப்பனாருக்கு மரியாதை செலுத்த வேண்டி வாதியின் தகப்பனார் பெயரிலேயே கிரயம் பெறப்பட்டது. வாதியே மேற்படி கிரயப் பத்திரங்களின் அசல் ஆவணங்களை தன்வசம் வைத்துக் கொண்டிருந்தார்.

**4.** வாதியின் தனிப்பட்ட வருமானத்தைக் கொண்டும், கடன் தொகை பெற்றும் பிரதிவாதிகளுக்கு சிறப்பான முறையில் 2000 ம் வருடத்திற்கு நீண்ட காலங்களுக்கு முன்பே திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவரவர் கணவருடன் வாழ்ந்து வருகிறார்கள். திருமணத்திற்குப் பின்னிட்டு பிரதிவாதிகள் வாதியின் குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்ற உரிமையை இழந்துவிட்டார்கள். வாதியின் தகப்பனார் பெயரில் கொளந்தாயம்மாள் மற்றும் பலரிடமிருந்து கிரயம் பெறப்பட்ட சொத்தை தவிர மீதியுள்ள அனைத்து சொத்துக்களும் குடும்பத்தின் பெண் அங்கத்தினர்களை நீக்கிவிட்டு வாதியும், வாதியின் தகப்பனாரும் மட்டுமே கூட்டுப் பங்குதாரர் என்ற முறையில் அனுபவித்து வந்தார்கள். 3 ம் பிரதிவாதிக்கு 1987 ம் வருடத்தில் திருமணம் நடைபெற்றது. ஒவ்வொரு பிரதிவாதிகளுக்கும் 20 பவுன் நகையும் ரூ.10,000/-மும் கொடுக்கப்பட்டது. திருமணத்திற்குப் பின்னிட்டு பிரதிவாதிகள் கூட்டுக் குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்ற உரிமையை இழந்து விட்டார்கள். 1999 ம்வருட வாக்கில் வாதியின் தகப்பனாருக்கு 80 வயதாகியதால் அவரால் விவசாய வேலைகளை கவனிக்க இயலயில்லை. எனவே, விவசாய வேலைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தன்னுடைய எதிர்கால வாழ்க்கைக்காக சில ஏற்பாடுகள் செய்ய அவர் விரும்பினார். அவ்வாறு வாதியின் தகப்பனார் விரும்பிய காலகட்டத்திற்கு முன்பாகவே வாதி தாவா 1 ம் அயிட்டச் சொத்தில் உள்ள பழைய பண்ணை வீட்டில் தனிக்குடித்தனமாக இருந்து வந்தார். அப்போது வாதியின் தகப்பனாரும், தாயாரும் கோபி கவுண்டன்பாளையத்தில் உள்ள பூர்வீக வீடான கதவு எண்.37 ல் வசித்து வந்தார்கள். வாதியின் குடும்பத்திற்கு தாவாச் சொத்தை தவிர

தகப்பனார்வழிப் பாட்டியான வள்ளியம்மாளுக்கு 12.04.1955 தேதிய கிரயப் பத்திரத்தின்படி சொத்து பாத்தியப்பட்டிருந்தது. அந்தச் சொத்து குள்ளம்பாளையம் கிராம புல எண்.123, 126 புதிய ரீ.சர்வே எண்.31/3, 8, 10, 15 மற்றும் 16 ஆகியவைகளில் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.1.25 என்றும் மற்றும் ரீ.சர்வே எண்.28/1 ல் மானாவரி பூமி பு.ஏ.1.02 ஆக மொத்த விஸ்தீரணம் பு.ஏ.2.27. வாதியின் தகப்பனார் தன்னுடைய மற்றும் அவரது மனைவி ஆகியோரின் எதிர்கால நலன் காக்கும்பொருட்டு குடும்ப ஏற்பாடு செய்து கொள்ள விரும்பினார். அதனால் பஞ்சாயத்தார்கள் மூலம் குடும்ப ஏற்பாடு நடைபெற்றது. மேற்படி பஞ்சாயத்தில் அனைத்து சொத்துக்களையும் வாதி எடுத்துக் கொள்ள வேண்டியது என்றும் குடும்பத் தொகையை வாதியின் தகப்பனார் பெற்றுக் கொண்டு அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு நல்வாழ்க்கை வாழ வேண்டியது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேற்படி வாதியின் தகப்பனார் பெறும் தொகையை அவருக்கு நம்பிக்கையுள்ள ஆட்களிடம் கொடுத்து அதிலிருந்து பணம் சம்பாதிக்க முடியும் என்று பஞ்சாயத்தார்கள் நம்பினார்கள். அவர் தன்னுடைய எதிர்காலம் மற்றும் மனைவியின் எதிர்காலத்திற்கு சுமார் ரூ.10 லட்சம் தேவைப்படும் என்று கணக்கிட்டார்.

5. மேற்படி குடும்ப ஏற்பாட்டைத் தவிர 19.06.2000 தேதியில் தன்னுடைய தாயார் வள்ளியம்மாளுக்குப் பாத்தியப்பட்ட சொத்தை ஒரு அம்மாசை ராசப்ப கவுண்டருக்கு ரூ.3,00,000/-க்கு விற்றார். மேற்படி கிரயப் பத்திரத்தில் மதிப்பு குறைவாக காட்டப்பட்டது. மீதி ரூ.7 லட்சம் ரூபாயை வாதி, தனது தகப்பனாருக்கு விடுதலைக்காக கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்காக வாதி பூர்வீகச் சொத்திலுள்ள வீட்டில் தனக்குள்ள பங்கை விடுதலை செய்து கொடுத்துவிட வேண்டும். அதன் பின்னிட்டு வாதியின் தகப்பனார் மேற்படி பூர்வீக வீட்டையும் அதைச் சார்ந்த காலியிடத்தையும் மூன்றாம் நபர்களுக்கு விற்றுவிட்டார். அவ்வாறு விற்பனை செய்யும்போது குடும்ப ஏற்பாட்டில் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்டதால் வாதியும் பிரதிவாதிகளும் ஒன்றும் சொல்வதற்கில்லாமல் இருந்தது. வாதி மீதி தொகை ரூ.7 லட்சத்தை கொடுக்க சம்மதித்திருந்தார். வாதி மேற்படி ரூ.7 லட்சத்தை தவணை முறையில் பின்னிட்டு செலுத்த அனுமதிக்குமாறு கோரி வாதியின் தகப்பனார் ஒப்புக்கொண்டுவிட்டதால், குடும்ப ஏற்பாட்டு ஒப்பந்தம் கடந்த 2000 ம் வருடம் ஜூன் மாதத்தில் முடிவுற்றது. வாதியின் தகப்பனார் கடந்த 2000 ம் வருடம் ஜூன் மாதத்திலேயே வாதிக்கு விடுதலை செய்துகொடுத்துவிட்டார்.

6. குடும்ப ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தும்விதமாக 19.6.2000 ம்தேதிய கிரயப் பத்திரம் ஏற்பட்ட 3 நாட்களுக்குள் ரூ.3 லட்சத்தை வாதி செலுத்தினார். கிரயம் பெற்றவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதியும் பிரதிவாதிகளும் மேற்படி கிரயப் பத்திரத்தில் விற்பவர்களாக காட்டப்பட்டு கையெழுத்து செய்துள்ளார்கள். கடந்த 22.06.2000 லிருந்து வாதி தாவாச் சொத்துக்களின் முழு உரிமையாளராக அடைந்து அனுபவித்து வருகிறார். தந்தை, மகன் என்ற நெருங்கிய உறவுமுறையால் இருந்த நம்பிக்கையில் எழுத்துமூலமான ஆவணம் எதுவும் வேண்டுமென்று வாதி நிர்பந்திக்கவில்லை. பின்னிட்டு வாதி அவரது தகப்பனாருக்கு ரூ.4 லட்சம் செலுத்த வேண்டியிருந்தது, 5 மாத காலத்தில் மேற்படி தொகையான ரூ.4 லட்சத்தை இரண்டு தவணைகளாக செலுத்தப்பட்டு பின்னிட்டு வாதி தாவாச் சொத்து முழுவதிலும் தனித்து சுவாதீனம் பெற்று அனுபவித்து வந்தார். அவருடைய சுவாதீனத்தில் அவருடைய தந்தை ஒருபோதும் இடையூறு செய்ததில்லை.

7. தாவாச் சொத்துக்களை முழு உரிமையாளராக அடைந்த பின்னிட்டு வாதி பல மேம்பாடுகளை செய்துள்ளார். தாவா 3 ம் அயிட்டச் சொத்தில் 3 ஆழ்குழாய் கிணறு அமைத்து விவசாயம் செய்து வருகிறார். தாவா 1 ம் அயிட்டச் சொத்தில் ஒரு ஆழ்குழாய் கிணறும், தாவா 3 ம் அயிட்டச் சொத்தில் இரண்டு ஆழ்குழாய் கிணறும் அமைத்துள்ளார். சொத்துக்கள் வாதியின் தகப்பனார் பெயரிலேயே இருந்து வந்ததால் மின் இணைப்புகள் வாதியின் தகப்பனார் பெயரில் பெறப்பட்டுள்ளது. ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கும், மின்சார மோட்டார் பம்பு செட் அமைப்பதற்கும் பெருந்தொகையை வாதி செலவு செய்துள்ளார். மேற்படி ஆழ்குழாய் கிணற்றிலிருந்து வரும் நீர் பாசனப் பயிருக்கு இல்லாத போதிலும் மானாவரி பாசனத்திற்கு போதுமானதாக இருந்து வருகிறது. 2009 ம் வருடத்தில் வாதியின் மகனும், மகளும் வளர்ந்துவிட்ட சூழ்நிலையில் தாவா 1 ம் அயிட்டச் சொத்தில் புதிய வீடு கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் ரூ.10 லட்சம் செலவு செய்து கட்டிடம் கட்டி, அதில் வாதி குடும்பத்தினர் குடியிருந்து வந்து பண்ணையை கவனித்துக்கொண்டு காளை, பசு வியாபாரம் செய்து வருகிறார்கள். வாதி தனது தகப்பனாருக்கு செலுத்த வேண்டிய தொகையை 3 தவணைகளில் செலுத்திவிட்டார்.

8. இந்நிலையில் பெருந்துறையில் சிப்காட் அமைந்ததாலும் 47 தேசிய நெடுஞ்சாலை ஆரம்பிக்கப்பட்டதாலும் ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் பெரிய அளவில் வளர்ச்சி ஏற்பட்டது. வாதி பல மேம்பாடுகள் செய்துள்ளதால் தாவாச் சொத்தின் மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது. பிரதிவாதிகளுக்கு அவர்களது தகப்பனார் விஜயமங்கலம்

யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி, பெருந்துறை பரோடா வங்கி, பெருந்துறை மற்றும் கோபிசெட்டிபாளையம் எஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி ஆகியவற்றில் வைப்பீடு செய்திருந்த சுமார் ரூ.20 லட்சம் பணத்தின் ஆசைப்பட்டார்கள். வாதியின் தாயாரை பிரதிவாதிகள் தங்கள் கைபாவையாக வைத்துக் கொண்டு வாதியின் தகப்பனார் மனதளவிலும் உடலளவிலும் தளர்வடைந்திருந்து தனது வீட்டிற்குள் நடமாடுவதற்கே மனைவியைச் சார்ந்திருந்தார். வாதியின் மனைவிக்கும், வாதியின் தாயாருக்கும் ஏற்கனவே கருத்து வேறுபாடு இருந்து வந்தது. பிரதிவாதிகளின் தலையீட்டால் அது பெரிதளவில் ஆனதால் குடும்பத்தில் தகப்பன் மகன் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இடையே உள்ள உறவுமுறையே முறிந்துவிட்டது.

9. பிரதிவாதிகள் மேற்படி கருத்து வேறுபாட்டை நிரந்தரமாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அடிக்கடி அவர்கள் பெற்றோர் வீட்டிற்கு வந்து போக ஆரம்பித்துள்ளது வாதியின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் கேள்விப்பட்டார்கள். வாதியின் தகப்பனாரின் வங்கித் தொகையாக பெருந்தொகையை ரூ.20 லட்சத்தை அடைவதில் பிரதிவாதிகள் முழு நோக்கத்துடன் செயல்பட்டு வந்தார்கள். வாதி மேற்படி பிரதிவாதிகளின் நோக்கத்தை தெரிந்து கொண்டு 2010 டிசம்பர் மாதத்தில் அவ்வாறு கெட்ட எண்ணத்துடன் நடக்க வேண்டாமென்றும், தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு அனைவருக்கும் சேரத்தக்கது என்று எச்சரித்தார். மேற்படி தங்கள் எண்ணம் நிறைவேற தடையாக வாதி இருந்ததால் பிரதிவாதிகளுக்கு கோபம் ஏற்பட்டு, பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.222/2010 வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். வாதி குடும்பத்தினரிடம் உள்ள பகையின் காரணமாக நியாயமற்ற சட்டவிரோதமான நடவடிக்கைகளில் வாதியின் தாயார் ஈடுபட்டு வந்தார். அந்த சமயத்தில் என்ன நடக்கிறது என்பது கூட அறிய முடியாத நிலையில் 90 வயது முதியவராக வாதியின் தகப்பனார் பெரியண்ண கவுண்டர் இருந்தார். பிரதிவாதிகள் அவர்களுடைய திருமணங்களுக்குப் பிறகு கூட்டுப் பங்குதாரர் என்ற உரிமையை இழந்துவிட்டதும், வாதியிடம் ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டு வாதிக்கு வாதியின் தந்தை தனது உரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டதும், மேற்படி அ.வ.எண்.222/2010 தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும். வாதி தாவா சொத்துக்களின் முழு உரிமையாளார் என்ற முறையில் சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பது பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும்.

10. அ.வ.எண்.222/2010 நிலுவையில் இருக்கும்போது வாதியின் தாயாரின் துணையுடன் வாதியின் தகப்பனார் பெரியண்ண கவுண்டர் 92 வயதில் கைரேகை பெற்று

05.06.2012 ம்தேதி பாகபிரிவினை பத்திரம் என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். அந்த சமயத்தில் என்ன நடக்கிறது என்பது கூட அறிய முடியாத நினைவிழந்த நிலையில் பெரியண்ண கவுண்டர் இருந்தார். பின்னிட்டு அவர் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக எதிர்வாதம் செய்துள்ளதுபோல் யுக்தியை பிரதிவாதிகள் செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் அவசர கதியில் பாகப்பிரிவினை என்ற பெயரிட்ட ஆவணத்தை நிர்ணயமற்ற சங்கதிகள் துணையுடன் ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் என்று சொல்லப்பட்டுள்ள சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அந்தப் பத்திரத்தில் வாதி ஒரு தரப்பினர் இல்லை. அந்த பத்திரத்தில் பங்கு நலம்திகடு கண்டு பிரிக்கப்படவில்லை, அனைத்து தரப்பினர்களின் சொத்துக்களையும் சேர்க்கப்படவில்லை, வீடு சொல்லப்படவில்லை. 05.06.2012 ம் தேதிய பத்தரம் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திரம் ஏற்படுத்தப்பட்டவுன் பிரதிவாதிகள் மேற்படி அ.வ.எண்.222/2010-ஐ தள்ளுபடிக்கு விட்டுவிட்டார்கள். மேற்படி வழக்கு பாகப்பிரிவினை வழக்கு என்பதால் வாதி வழக்கை தொடர்ந்து நடத்த விரும்புவதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததால் பிரதிவாதிகள் மேற்படி வழக்கை நடத்த மனு செய்தார்கள். அதன் பின்னர் 05.06.2012 ம் தேதிய பத்திரத்தை கொண்டு பிராதை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்து தாவாச் சொத்தின் மதிப்பு ரூ.33 லட்சமாக உயர்ந்ததால் சார்பு நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அறிவுறுத்தி 30.11.2015 ம்தேதி உத்திரவிட்டது. மீண்டும் பிராது திருத்தப்பட்ட பின்னர் மீண்டும் கடந்த 05.03.2016 ம் தேதியில் உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய 15.03.2016 ம்தேதி மனு உத்திரவு ஆனது. இந்த தாவா தாக்கல் செய்யப்படும் வரை பிரதிவாதிகள் மேற்படி அ.வ.எண்.222/2010 ன் பிராதை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. வாதியின் தகப்பனாரின் வங்கி பணம் முழுவதையும் தங்கள் எண்ணம்போல் பெற்றுவிட்டதால் அவ்வழக்கை மீண்டும் நடத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

**11.** 05.06.2012 ம் தேதிய பத்திரத்தின் உருவாக்கம் சட்ட விரோதமானது என்றும் சட்டப்படி செல்லுந்தன்மை இல்லாதது. வாதியின் தகப்பனார் 02.10.2017 தேதியில் இறந்துவிட்டார். எனவே, வாதி மட்டுமே தாவாச் சொத்தின் முழு உரிமையாளர் ஆவார். எனவே, வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

12. **1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

இந்த வழக்கு பொய்யானது, சட்டப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்தப்

பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த பிரதிவாதிகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் தான் திருமணத்தை நடத்தி வைத்தனர். பிரதிவாதிகளின் திருமண காலகட்டங்களில் வாதிக்கு எவ்வித வருமானமும் இல்லை. வாதி இப்பிரதிவாதிகளின் திருமணத்திற்காக எத்தொகையும் செலுத்தவில்லை. அப்போது வாதி குடும்ப பொறுப்புகள் எதையும் கவனிக்காமல் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்தார். தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதி, பிரதிவாதிகளின் தகப்பனாரின் கூட்டுக்குடும்ப வருமானத்தைக் கொண்டு குடும்ப தலைவர் என்ற முறையில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும். அனைத்து சொத்துக்களும் கூட்டுக்குடும்ப சொத்துக்களே ஆகும். சில சொத்துக்களை வாதி தன்னுடைய சுயசம்பாத்தியத்தைக் கொண்டு தகப்பனார் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று சொல்லியுள்ளது தவறு. அவ்வாறு தன்னுடைய சுயசம்பாத்தியத்தைக் கொண்டு தகப்பனார் பெயரில் கிரையம் பெற்றதாக சொல்வது பினாமி சட்டப்படி சட்டவிரோதமானதாகும். அவ்வாறு சொல்ல வாதிக்கு உரிமையில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதி, பிரதிவாதிகள் மற்றும் அவரது தகப்பனார் ஆகியோரின் கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்த சொத்துக்களாகும். அனைவருக்கும் தலா 1/5 பங்கு பாத்தியம் ஆகும்.

13. வாதிக்கு 1993 ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னிட்டு 15 நாட்கள் மட்டுமே வாதியும், அவரது மனைவியும் வாதியின் பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக இருந்தார். திருமணத்திற்கு பின்னிட்டும் குடும்ப பொறுப்புகளை கவனிக்காமல் வேலை எதுவும் செய்யாமலும், விவசாயத்தை கவனிக்காமலும் இருந்ததால் வாதியின் தகப்பனார் வாதியை அவரது மனைவி முன்னிலையில் திட்டியதால் கோபம் கொண்ட வாதி தனிக்குடித்தனமாக சென்றுவிட்டார். அவ்வாறு தனிக்குடித்தனம் சென்றதால் தன் குடும்பத்தை கவனிப்பதற்கு தான் வியாபாரம் செய்யப்போவதாகவும், எனவே கோழி மற்றும் மாட்டு வியாபாரங்களில் ஈடுபடுவதற்காக தனக்கு பணம் தேவைப்படுவதாக கூறிக்கொண்டு வாதியின் தகப்பனாரிடமிருந்த குடும்ப நிதியை பெற்றுக்கொண்டு வாதியின் தகப்பனார் குடும்ப சொத்துக்களை தொடர்ந்து விவசாயம் கவனிக்க விட்டுவிட்டார். அவ்வாறு வியாபாரத்திற்காக பெற்ற தொகையில் கோழி மற்றும் மாட்டு வியாபாரத்தை ஆரம்பித்து சிறிது காலம் நன்றாக நடத்திவிட்டு மீண்டும் தன்னுடைய கெட்ட பழக்க வழக்கங்களினால் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. இதனால் மீண்டும் தொகை கேட்டு வாதியின் பெற்றோரை அவர் அணுகியபோது அவர்களுக்குள்

மன கசப்பு ஏற்பட்டு பேச்சு வார்த்தை எதுவும் இல்லாமல் போய்விட்டது. வேறு ஆண் துணை இல்லாமல் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்த வாதியின் பெற்றோர்களை இப்பிரதிவாதிகள் தான் பொறுப்புடன், பாசத்துடனும் பராமரித்து வந்தார்கள்.

**14.** வாதி சொல்லியுள்ளதுபோல் குடும்ப ஏற்பாடு என்று எப்போதும் ஏற்படவில்லை. வாதி தன்னுடைய தகப்பனாருக்கு எந்த தொகையும் எப்பொழுதும் கொடுத்ததில்லை. வங்கியில் பெரிய தொகையாக வாதியின் தகப்பனார் வைத்திருந்தார் என்றும், அதனை இப்பிரதிவாதிகள் அபகரிக்கும் நோக்குடன் வாதிக்கும், அவரின் தகப்பனாருக்கு இருந்த கருத்து வேறுபாட்டை அதிகப்படுத்தி அவர்களுக்கிடையே சண்டையை ஏற்படுத்தி வந்தார்கள் என்று சொல்லியுள்ளது இவ்வழக்கிற்காக புனையப்பட்டவை ஆகும். வாதியின் தகப்பனார் வங்கியில் வைப்பீடு செய்திருந்ததாக சொல்லப்படும் வைப்பீடுகளுக்கும், இப்பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. வாதியின் தகப்பனார் பெயரிலேயே தாவா சொத்தின் வருவாய்த்துறை ஆவணங்கள் இன்றளவும் இருந்து வருகிறது. வாதி, பிரதிவாதிகளின் குடும்ப சொத்துக்கள் நிரந்தர பிரிவினை இன்றி கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் 39/2005-ன்படி பிரதிவாதிகளுக்கும் அவர்களின் குடும்ப சொத்தில் பிறப்பின் அடிப்படையில் சமபங்கு பாத்தியம் உள்ளது.

**15.** பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் தங்களுக்கு உள்ள பங்கைப் பிரித்து தரக் கோரி தனது பெற்றோரையும், வாதியையும் அணுகியபோது வாதி சம்மதம் தெரிவிக்காமல் பெற்றோர்களையும் பாகப்பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளக் கூடாது என்று மிரட்டி வைத்தார். எனவே இந்தப் பிரதிவாதிகள் பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.222/2010 வழக்கை தாக்கல் செய்தார்கள். மேற்படி அசல் வழக்கில் எதிர்வாதம் செய்ய வேண்டுமென்பதற்காக ஏற்கனவே குடும்ப ஏற்பாடு நடந்ததாக பொய்யான எதிர்வாதத்தை வாதி தாக்கல் செய்துள்ளார். அ.வ.எண்.222/2010 ன் எதிர்வழக்குரைக்கும் இவ்வழக்கின் வழக்குரைச் சங்கதிகளுக்கும் முரண்பாடுகள் உள்ளன.

**16.** இந்நிலையில் வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் பெரியண்ண கவுண்டர் தனக்குள்ள 1/5 பங்கைப் பொருத்து மகள்களான இந்தப் பிரதிவாதிகளுக்கு 05.06.2012 ம் தேதியில் விடுதலைப் எழுதிக் கொடுக்க விரும்பினார். பிரிவினை ஆகாத கூட்டுக்குடும்பச் சொத்தைப் பொருத்து விடுதலை செய்து கொடுக்க இயலாது என்ற அடிப்படையில் 05.06.2012 ம்தேதி பாகப்பிரிவினை என்ற பெயரிட்டு பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தார். மேற்படி பாகக்கறார் பத்திரத்தைப் பொருத்து பெருந்துறை சார்பு நீதிமன்ற

அ.வ.என்.222/2010 ல் தாக்கல் செய்துள்ளார்கள். அ.வ.எண்.222/2010 ஐ திருத்தம் செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டு பிராது திருத்தப்பட்டுள்ளது. மேற்படி திருத்தப்பட்ட பிராதின் மதிப்பு அதிகரித்ததால் உரிய நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யச்சொல்லி வழக்கு திருப்பப்பட்டது.

17. இந்நிலையில் பிரதிவாதிகாளின் தகப்பனாருக்கு வயோதிகம் காரணமாக தொடர்ந்து உடல்நிலை பாதிக்கப்பட்டு கோபிசெட்டிபாளையம் செங்கோட்டையன் மருத்துவமனையில் சிறுநீர செயலிழப்புக்காக சிகிச்சை பெற்று வந்தார். வாதி அவரைப் பராமரிக்கவில்லை. இந்தப் பிரதிவாதிகள்தான் உரிய மருத்துவ சிகிச்சை அளித்து பராமரித்து வந்தார்கள். அந்தச் சமயத்தில் 28.08.2016 ம்தேதி வாதி அவரின் தகப்பனார் அனுபவித்து வந்த சொத்துக்குள் அத்துமீறி நுழைந்து வாதியின் தகப்பனாரை கொன்று விடுவதாக மிரட்டி அவரை வழுக் கட்டாயமாக வெளியேற்ற முயற்சி செய்ததால், இந்தப் பிரதிவாதிகள் 06.09.2016 ம்தேதி ஈரோடு, காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து மேற்படி புகாரின்பேரில் விசாரணை நடந்து தகப்பனாரின் காலம் வரை சொத்து சம்பந்தமாக யாரும் எவ்வித பிரச்சினையும் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தி வாதியை எச்சரித்து அனுப்பினார்கள். அதன் பின்னிட்டு இந்தப் பிரதிவாதிகளின் தகப்பனார் 02.10.2017 ம்தேதி இறந்துவிட்டார். அவருடைய இறுதிச் சடங்குகளை செய்வதற்கு வாதி முன்வரவில்லை. பஞ்சாயத்தார்கள் வாதியை பலமுறை அழைத்தபோதும் வாதி மறுத்து விட்டார். 05.06.2012 ம் தேதிய பத்திரத்தை தகப்பனார் உயிருடன் இருக்கும் காலம்வரை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்துவிட்டு அவர் இறந்த பிறகு மேற்படி பத்திரம் செல்லாது, தன்னை கட்டுப்படுத்தாது என்று வழக்காட வாதிக்கு உரிமையில்லை. சொத்து விவரம் தவறானது. செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற முத்திரைக் கட்டணம் தவறானது. தாவா முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. எனவே, இவ்வழக்கைச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

18. <u>மேற்கூறப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப் -பட்டுள்ளன:</u>

| | |
|---|---|
| 1. | வாதி வழக்குரையில் கோரியபடி விளம்புகை பரிகாரம் பெற உரியவரா? |
| 2. | வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது வாதி எந்த நடவடிக்கையும் |

| | |
|---|---|
| | எடுக்காமல், 05.06.2012 ம் தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் செல்லுபடியாகாது என்று கோருவதற்கு வாதிக்கு உரிமை இல்லை என்ற பிரதிவாதிகளின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதா? . |
| 3. | வாதி வழக்குரையில் கோரியபடி நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெற உரியவரா? |
| 4. | வாதிக்கு கிடைக்கக் கூடிய வேறு பரிகாரம் என்ன? |

<u>**அசல் வழக்கு எண்.306/2019 (**அ.வ.எண்.222/2010-சார்பு நீதிமன்றம், பெருந்துறை)</u>

நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களை நலந்திகடு கண்டு 5 சம பாகங்களாகப் பிரித்து அதில் 4 சம தொடர்ச்சியான பாகங்களை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்றும், தாவா 4 ம் அயிட்டச் சொத்தை நலந்திகடு கண்டு 4 சம பாகங்களாகப் பிரித்து அதில் 3 சம தொடர்ச்சியான பாகங்களை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்றும் (இ.ம.எண்.859/2015 ல் 30.11.2015 தேதியிட்ட உத்தரவின்படி தாவா 4 ம் அயிட்டச் சொத்தைப் பொருத்த பரிகாரம் சேர்க்கப்பட்டுள்ளது) தாவாச் சொத்துக்களைப் பொருத்து இறுதியான பாகம் ஏற்படும் வரை 2 ம் பிரதிவாதி எந்தவித வில்லங்க விவகாரமும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் வாதிகளின் இவ்வழக்குச் செலவுத் தொகையுடன் பாகப் பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும்வாதிளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

19. <u>**அ.வ.எண்.306/2019 ன் வழக்குரையின் சுருக்கம்:**</u>

வாதிகள் மற்றும் 2 ம் பிரதிவாதி ஆகியோர் 1 ம் பிரதிவாதியின் பிள்ளைகள். வாதிகளும், பிரதிவாதிகளும் இந்து கூட்டுக்குடும்ப அங்கத்தினர்கள். 1 ம் பிரதிவாதி கர்த்தா ஆவார். 1 ம் பிரதிவாதிக்கு பூர்வீக சொத்துக்கள் விவசாய நிலங்கள் இருந்ததை அவர் பொதுவில் அனுபவித்து வந்தார். 12.02.1964 ம் தேதியில் 1 ம் பிரதிவாதியும், மற்ற கூட்டு உரிமையாளர்களும் பொது சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் எழுதி கொண்டார்கள். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் 1 ம் பிரதிவாதிக்கு 'பீ' ஷெட்யூல் சொத்து பிரிவினையானது. 1 ம் பிரதிவாதி அதை அடைந்து அவரது பிள்ளைகளான வாதிகள் மற்றும் 2 ம் பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவித்து வந்தார். 12.02.1964 ம் தேதிய பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்களை

1 ம் பிரதிவாதி கூட்டு குடும்ப சொத்துக்களாக அனுபவித்து வந்ததில் வந்த வருமானத்தை கொண்டு அவரது பெயரில் கர்த்தா என்ற முறையில் கிரயம் வாங்கியுள்ளார். அவர் பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்களும் கூட்டு குடும்ப சொத்துக்கள் தான். அவை யாவும் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளால் பொதுவில் அனுபவித்து வரப்பட்டது. அவர்களுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை. இந்துவாரிசுரிமை திருத்தல் சட்டம் 39/2005 ன்படி வாதிகளும் கூட்டு உரிமையாளர்கள் ஆவர். 1, 2 பிரதிவாதிகளும், வாதிகளும் தலா 1/5 பங்கு கூட்டுகுடும்ப சொத்தில் உரிமையுடையவர்கள் ஆவர். சொத்துக்கள் அனைத்தையும் பொதுவில் எவ்வித நிரந்தர பாகப்பிரிவினை இல்லாமல் கூட்டாக அனுபவித்து வந்தார்கள். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே சொத்தில் வந்த வருமானத்தின் பேரில் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. அதனால் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் 5 பாகங்களாக பிரிவினை செய்து வாதிகளுக்கு 3 பாகங்களை ஒதுக்கும்படி கேட்டபோது பிரதிவாதிகள் ஒப்புக் கொள்ளவில்லை. வாதிகளின் சட்டப்பூர்வமான உரிமையை மறுத்து சொத்துக்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்தனர். ஆகவே வாதிகள் பாகப்பிரிவினை கோரியும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**20.** இவ்வழக்கு நிலுவையில் வாதிகளின் தகப்பனார் 1 ம் பிரதிவாதி தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களில் அவருடைய 1/5 பாகத்தைப் பொருத்து வாதிகளுக்கு விடுதலை செய்து 05.06.2012 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினை ஆவணம் என்று பெயரிடப்பட்ட விடுதலை ஆவணத்தை அவருடைய பாகத்திற்குரிய தொகையைப் பெற்றுக் கொண்டு எழுதிக் கொடுத்துள்ளார். இந்தச் சங்கதியைப் பொருத்து வாதிகளின் தகப்பனார் தன்னுடைய எதிர்வழக்குரையிலும் குறிப்பிட்டுள்ளார். எனவே, வாதிகளுக்கு தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களில் 4/5 பங்குள்ளது. வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளதால் தாவா 4 வது அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்பதால் மேற்படி வீடு 05.06.2012 தேதிய பாகப் பிரிவினை ஆவணத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே, மேற்படி சொத்தில் வாதிகளுக்கு 3/5 பாகமும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1/5 பாகமும் பாத்தியமுள்ளது.

**21.** வழக்கு நிலுவையில், 1 ம் பிரதிவாதி அவருடைய வாரிசுகளான வாதிகள் மற்றும் 2 ம் பிரதிவாதியை வாரிசுகளாக விட்டுவிட்டு 02.10.2017 தேதியில் இறந்து -விட்டதால் அவரது மனைவி பாப்பாத்தி (எ) தங்கம்மாள் இவ்வழக்கு தரப்பினராக சேர்க்கப்பட்டதில் அவரும் இறந்துவிட்டார். மேற்படியார்களுக்கு வாதிகள் மற்றும் 2 ம்

பிரதிவாதி வாரிசுகள் ஆவர். அவர்கள் ஏற்கனவே தரப்பினர்களாக உள்ளார்கள். ஆகவே வாதிகளுக்கு தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்தில் 4/5 பங்கும், 4 ம் அயிட்டச் சொத்தில் ¾ பங்கும் உரிமையுள்ளது. அதனை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், மேற்படி தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

22. **<u>1 ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>**

இந்த வழக்கு பொய்யானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. இந்தப் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையேயான உறவுமுறை ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்த 1 ம் பிரதிவாதி தன்னுடைய பிள்ளைகளின் நலன் கருதி 05.06.2012 ம்தேதி வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுடன் ஒரு ஏற்பாடு செய்து கொண்டதில் இந்தப் பிரதிவாதி ரூ.1 லட்சம் பெற்றுக் கொண்டு தாவாச் சொத்துக்களைப் பொறுத்து வாதிகளுக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் பிரிவினை செய்து கொடுத்து விட்டார். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் 'பீ' ஷெட்டியூல் சொத்து வாதிகளுக்கு கூட்டாக பிரிவினை செய்து கொடுத்ததில் அவர்கள் கையெழுத்து செய்து சுவாதீனம் பெற்றுக் கொண்டார்கள். இந்தப் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர். இந்த எதிர்வழக்குரையுடன் மேற்படி பாகப் பிரிவினை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, தாவாச் சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பிரிவினை செய்யப்பட்டு விட்டதால் மீண்டும் பிரிவினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இந்த வழக்கு அவசியமற்ற தரப்பினரை சேர்த்துள்ளதால் பாதிக்கப்படுகிறது. வாதிகள் பின்னிட்ட சங்கதிகளை மறைத்து அவசியம் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

23. எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு இந்த 1 ம் பிரதிவாதி இறந்துவிட்டார்.

24. **<u>2 ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>**

வாதிகள் தரப்பில் 1 ம் பிரதிவாதிக்கும் அவரது பிள்ளைகளுக்கும் இடையே பாகப் பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்று சொல்வது தவறு. இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டம் பிரிவு 39/2005 ன்படி வாதிகளும் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் என்ற

அடிப்படையில் தாவாச் சொத்தில் 1/5 பங்கு இருப்பதாக சொல்வது தவறு. பிரதிவாதிகளுடன் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வதும் தவறு. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருப்பதாக சொல்வது தவறு. வாதிகள் பாகப் பிரிவினைக்கு கேட்டதாகச் சொல்வது தவறு.

25. இந்தப் பிரதிவாதி சொல்லிக்கொல்வது யாதெனில், 1ம் பிரதிவாதி 90 வயது உடையவர். ஆனால், வாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் வயது 85 என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு. 1ம் பிரதிவாதி 15 வருடமாக உடல்நலம் சரியில்லாமல் உள்ளார். 2000ம் ஆண்டின் தொடக்கத்திலேயே 1ம் பிரதிவாதி அவரது பங்கைப் பொறுத்து விடுதலை செய்து கொடுத்துவிடுவதாகவும், அவரால் வயதான காலத்தில் விவசாயம் செய்ய முடியாத காரணத்தினாலும் வயாதிவிட்டதாலும் குடும்ப ஏற்பாடு செய்வதாக சொன்னதன்பேரில் குடும்ப நல விரும்பிகளான பழனிசாமி, பொன்முடி மற்றும் சிலர் முன்னிலையில் ஏப்ரல் 2000ல் ஒரு குடும்ப ஏற்பாடு நடைபெற்றது. அந்த குடும்ப ஏற்பாட்டில் 2.27 ஏக்கர் நிலத்தை விற்று வரும் தொகையை வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கொடுத்துவிடுவதாக முடிவு செய்யப்பட்டது. வாதிகளுக்கு பல வருடங்களுக்கு முன்பே திருமணமானதில் அனைத்து வகையான சீர்களும் கொடுக்கப்பட்டுவிட்டது. மேற்படி குடும்ப ஏற்பாட்டில் 1ம் பிரதிவாதிக்கு வங்கியில் வைப்பீடு இருப்பது குறித்து சொல்லப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி அவரது பங்கு முழுவதையும் 2ம் பிரதிவாதிக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டார். அதன்படி பொதுச் சொத்தில் 2.27 ஏக்கர் 19.06.2000ம்தேதி கிரயம் கொடுக்கப்பட்டுவிட்டது. அந்த தொகையில் வாதிகளுக்கு ½ பங்கும், 1ம் பிரதிவாதிக்கு ½ பங்கும் கொடுக்கப்பட்டு -விட்டது. 1ம் பிரதிவாதி வங்கியில் மேற்படி தொகையை வைப்பீடு செய்துள்ளார். தற்போது சொத்தின் விலை பல மடங்கு அதிகமாகி விட்டதால் வாதிகளுக்கு இந்தப் பிரதிவாதியின் மீது ஏற்பட்ட பொறாமையின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். குடும்ப ஏற்பாடு எழுத்துமூலமாக ஏற்படாததை சாதகமாக கொண்டு குடும்ப ஏற்பாட்டை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி 2000ல் குடும்ப ஏற்பாடு ஏற்பட்டுவிட்டது. எனவே, 1ம் பிரதிவாதிக்கும் வாதிகளுக்கும் சொத்தில் பங்குரிமை பெற தகுதி இல்லை. 1989க்கு முன்பே வாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. ஏப்ரல் 2000ல் இருந்து 2ம் பிரதிவாதியே தாவாச் சொத்தில் முழு உரிமையாளராக அனுபவித்து வருகிறார். குடும்ப ஏற்பாட்டின்படி இந்தப் பிரதிவாதி தாவாச் சொத்தில்

போர்வெல் அமைத்து, ரூ.5 லட்சம் செலவு செய்து மேம்படுத்தியுள்ளார். வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**26. <u>24.02.2025 தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரை -யின் சுருக்கம்:-</u>**

1 ம் அயிட்ட சொத்து பிரதிவாதிகளின் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்தாகும். அனைத்து கூட்டுப் பங்குதாரர்களாலும் கூட்டாக அனுபவித்து வந்தது. 12.02.1964 ல் கூட்டு பங்குதார்களுடன் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவாச் சொத்து 2 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியண்ண கவுண்டருக்கு பாகப் பிரிவினையில் 'பீ' ஷெட்யூலாக ஒதுக்கப்பட்டது. பின்னிட்டு அசல் கூட்டு பங்குதாரர்களுக்கிடையே சொத்தை அனுபவிப்பதில் சிரமம் ஏற்பட்டதால் ஒரு பஞ்சாயத்து நடத்தியதில் வண்டி பாதை, பாசன வசதி ஆகியவை குறித்து 30.01.1994 ல் பஞ்சாயத்தார் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.

**27.** 2 ம் அயிட்டச் சொத்து க.ச.எண்.100 ன் மொத்த விஸ்தீரணம் 11.82 ஏக்கர் ஆகும். அது 1 ம் வாதியின் தகப்பனாரின் பாட்டனாருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி சர்வே எண்ணில் ½ பங்கு பொதுவில் இருந்ததை 3 ம் நபருக்கு விற்பனை செய்யப்பட்டது. க.ச.எண்.100 ல் இருந்த 11.82 ஏக்கரை வாய்மொழியாக பிரிவினை செய்து ரங்கைய கவுண்டர் மற்றும் ராமசாமி கவுண்டர் ஆகியோர் 1958 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் மேபுற பாதி பங்கு இந்தப் பிரதிவாதியின் மூதாதையருக்கும் கிழபுற பாதி ராமசாமி கவுண்டர் மற்றும் பலருக்கும் ஒதுக்கப்பட்டது. மேற்படி ராமசாமி கவுண்டரும் மற்றவர்களும் அவர்களது பங்கைப் பொறுத்து குப்பண்ண கவுண்டர் மகன் கொமாரசாமி கவுண்டருக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள். மேற்படி குப்பண்ண கவுண்டர் கிழபுற பகுதி உள்ள ½ பங்கை பொறுத்து ஒரு வேலம்மாளுக்கு கொடுத்துவிட்டு பின்னிட்டு அதை பெற்றுக் கொண்டார். பின்னிட்டு குப்பண்ண கவுண்டரும் அவரது மகன்களும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட ½ பங்கை ஒரு சின்னமுத்துசாமி கவுண்டர் மற்றும் கொழந்தையம்மாளுக்கு 19.05.1972 ல் கிரயம் கொடுத்துவிட்டார்கள். மேற்படி சின்னமுத்துசாமி கவுண்டர், குழந்தையம்மாள் ஆகியோர் 12.07.1982 ம்தேதியில் சொத்துக்களை ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை மூலம் பிரித்து கொண்டார்கள். மேற்படி நபர்கள் அனைவரும் பிரிவினை செய்து கொண்டதில் சின்னசாமி ஒரு பகுதியை இந்திராணியிடமிருந்து கிரயம் பெற்றார். அவரிடமிருந்து பெரியண்ண கவுண்டர் 21.01.1987 ம்தேதியில் கிரயம் பெற்றுள்ளார். அதற்கான தொகை இந்தப் பிரதிவாதியால்

கொடுக்கப்பட்டது. ரங்கைய கவுண்டர் மற்றும் அவரது மகன் பெரியண்ண கவுண்டர் சொத்தைக் கிரயம் பெற்ற பிறகு அதை குத்தகைக்குவிட்டார்கள். 11.74 ஏக்கர் முழுவதும் இந்த பிரதிவாதிகளின் குடும்பத்தாருக்கே வந்துவிட்டது.

**28.** 3ம் அயிட்டச் சொத்தைப் பொறுத்து ரங்கைய கவுண்டர் ஒரு குமாரசாமி கவுண்டரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். கிரயம் பெற்ற தேதியிலிருந்து ரங்கைய கவுண்டர் அனுபவித்து வந்ததில் அவரது மகன் பெரியண்ண கவுண்டருக்கு வாரிசுரிமைப்படி பாத்தியப்பட்டதில் அவருக்குப் பிறகு இந்தப் பிரதிவாதியே அனுபவித்து வருகிறார். அனைத்து சொத்துக்களும் தரிசு நிலங்களாகும். அதில் வருமானம் இல்லை. 1ம் அயிட்டச் சொத்தில் சிறிதளவு வருமானம் வந்தது. அது குடும்பத்தின் செலவுக்கே போதுமானதாக இருந்தது. வாதிகள் திருமணத்திற்கு தயாராக இருந்தார்கள். அதனால், இந்தப் பிரதிவாதி இளவயதிலேயே சில வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். இந்தப் பிரதிவாதி மாடு வியாபாரம் செய்து பல்வேறு ஊர்களுக்கு சென்று சந்தைகளில் மாடு வியாபாரம் மற்றும் கோழி வியாபாரம் செய்தார். அந்த காலக்கட்டத்தில் இந்த பிரதிவாதி மாடுகள், கோழிகள், சேவல்கள் எருதுகள் ஆகியவை வியாபாரம் செய்தால் அவரை மாட்டு வியாபாரி, கோழி வியாபாரி என்று கூறுவர். அவரது வியாபாரத்தில் நல்ல வருமானம் வந்தது. 1ம் பிரதிவாதிக்கு வருமானம் எதுவும் இல்லை. இந்த பிரதிவாதியின் வருமானத்தைக் கொண்டு க.ச.எண்.100ல் இருந்த ½ பங்கை கொழந்தையம்மாளிட -மிருந்து கிரயம் பெற்றார். இந்தப் பிரதிவாதியின் தொகையே கிரயத்திற்கு கொடுக்கப்பட்டது. கிரயப் பத்திரம் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டது. அசல் கிரய ஆவணம் இந்த பிரதிவாதி வசமே உள்ளது.

**29.** இந்தப் பிரதிவாதி வருமானம் ஈட்டியதில் வாதிகளின் திருமணத்திற்காக கடனும் வாங்கியிருந்தார் .2000க்கு முன்பாக திருமணம் ஆனதில் அவர்கள் கணவருடன் வசித்து வந்தார்கள். வாதிகள் அவ்வப்போது பெற்றோர்களைப் பார்க்க விருந்தாளியாக வந்து சென்றார்கள். ஆகவே, அவர்கள் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களல்ல. இந்தப் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்கள் மற்றும் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் இந்தப் பிரதிவாதிக்கே பாத்தியப்பட்டது. 3ம் வாதிக்கு 1987ல் திருமணம் ஆனது. திருமணத்தின்போது 20 நகையும், ரூ.10,000/- தொகையும் கொடுக்கப்பட்டது. அதனால் அவர் கூட்டுக் குடும்ப உறுப்பினர் என்ற அந்தஸ்து அற்றுபோய்விடுகிறது. 1989ல் 1ம் பிரதிவாதிக்கு 85 வயது என்பதால் அவரால் விவசாய வேலை செய்ய முடிய -வில்லை என்பதால் சில ஏற்பாடுகளை அவரது எதிர்காலத்திற்காக செய்ய வேண்டி

-யிருந்தது. அவருக்கு தனியாக சாப்பாடும், 3ம் அயிட்டச் சொத்தில் வீடும் ஒதுக்கப்பட்டது. மேற்படி பூர்வீக வீட்டில் 1ம் பிரதிவாதி அவருடைய மனைவியுடன் வாழ்ந்து வந்தார். இந்தப் பிரதிவாதியும் அவருடைய மனைவி மக்களும் பழைய பண்ணை வீட்டில் 3ம் அயிட்டச் சொத்தில் தனியாக வாழ்ந்து வந்தார்கள்.

**30.** மேற்படி சொத்துக்கள் அல்லாது இந்தப் பிரதிவாதியின் பாட்டி வள்ளியம்மாளுக்கு 12.04.1955 தேதிய ஆவணப்படி பாத்தியப்பட்ட சொத்து குள்ளம்பாளையம் கிராம பழைய க.ச.எண்.123 மற்றும் 124 ரீ.சர்வே எண்கள்.31/3, 31/8, 31/8, 31/10, 31/15, 31/16 மற்றும் ரீ.சர்வே எண்.28/1ல் மொத்தம் 2.27 ஏக்கர் பாத்தியப்பட்டிருந்தது. 1ம் பிரதிவாதி அவருடைய எதிர்காலத்திற்காகவும் அவருடைய மனைவிக்காகவும் குடும்ப ஏற்பாடு செய்ய விரும்பினார். அதனால் எஸ்.பி.அர்ச்சுனன் மேட்டுக்காட்டுத் தோட்டம், பொன்முடி, பழனிசாமி மூங்கில்பாளையம், சதாசிவம் குளுக்கனாத்தோட்டம், பொன்முடி மற்றும் சிலர் 2000ம் வருடம் வைகாசி மாதத்தில் ஒரு குடும்ப ஏற்பாடு செய்தார்கள். அந்த குடும்ப ஏற்பாட்டில் இந்தப் பிரதிவாதி அனைத்து சொத்துக்களையும் எடுத்துக் கொள்ளவும் 1ம் பிரதிவாதிக்கு தொகை கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி பணத்தை வட்டிக்கு விட்டு வருமானம் ஈட்டி வந்தார். அவருடைய தனிப்பட்ட எதிர்கால வாழ்க்கைக்காக ரூ.10 லட்சம் கொடுக்கப்பட்டது. 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு சீர் செய்ய விரும்பினார். மேற்படி குடும்ப ஏற்பாட்டில் அவருடைய தாயார் வள்ளியம்மாள் மூலமாக வந்த சொத்தை ரூ.3 லட்சத்திற்கு விற்கப்பட்டது. மீதி ரூ.7 லட்சம் இந்தப் பிரதிவாதி அவருடைய தகப்பனாருக்கு கொடுத்து விடுவதாகவும் தாவாச் சொத்தில் 1ம் பிரதிவாதியின் பங்குரிமையை விடுதலை செய்து கொடுப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1ம் பிரதிவாதி அவருடைய பங்கையும் பூர்வீக வீட்டையும் பொருத்து விடுதலை செய்து கொடுத்துவிட்டார். பின்னிட்டு பூர்வீக வீடு மற்றும் காலியிடத்தை 1ம் பிரதிவாதி மூன்றாம் நபர்களுக்கு விற்றுவிட்டார். அதைப் பொருத்து வாதிகளோ இந்தப் பிரதிவாதியோ ஆட்சேபணை செய்யவில்லை. ஏனென்றால் ஏற்கனவே குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டு -விட்டதால் ஆட்சேபணை செய்யவில்லை.

**31.** மேற்படி குடும்ப ஏற்பாட்டின்படி ரூ.7 லட்சத்தை இந்தப் பிரதிவாதி கொடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. அதனைப் பொருத்து தவணை முறையில் செலுத்துவதாக இந்தப் பிரதிவாதி அவருடைய தகப்பனாரிடம் கேட்டுக் கொண்டார். அதன்படி 1ம் பிரதிவாதி ஏற்றுக் கொண்டார். குடும்ப ஏற்பாடு 2000ல் ஏற்பட்டது. 1ம்

பிரதிவாதி அவருடைய பங்கைப் பொருத்து விடுதலை செய்து கொடுத்துவிட்டதால் உடனடியாக ரூ.3 லட்சம் அவருக்கு கொடுக்கப்பட்டது. தாவாச் சொத்தை 19.06.2000ல் விற்கும்போது கிரயம் பெறும் நபர் இந்தப் பிரதிவாதியை அணுகி இந்தப் பிரதிவாதியும் வாதிகளும் மேற்படி கிரயப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன்பேரில் மேற்படி கிரயப் பத்திரம் எழுதப்பட்டது. 1ம் பிரதிவாதி அவருடைய பங்கைப் பொருத்து விடுதலை செய்துவிட்டதால் இந்தப் பிரதிவாதியே சொத்தின் முழு உரிமையாளர் ஆவார். பிரதிவாதிகள் தந்தை மகன் என்பதால் குடும்ப ஏற்பாடு எழுத்து மூலமாக ஏற்படவில்லை. இந்தப் பிரதிவாதி மேலும் ரூ.4 லட்சத்தை அவருடைய தகப்பனாருக்கு தவணை முறையில் 6 மாதத்தில் கொடுத்துவிட்டார். அதன்படி 1ம் பிரதிவாதியால் விட்டுக் கொடுக்கப்பட்ட சொத்தை இந்தப் பிரதிவாதி அடைந்து அனுபவித்து வருகிறார். இந்தப் பிரதிவாதி குடும்ப ஏற்பாட்டின்படியான சொத்திற்கு முழு உரிமையாளர் ஆவார். தாவா 2ம் அயிட்டச் சொத்தில் மூன்று ஆள்குழாய் அமைத்து சொத்தை வளமாக்கியுள்ளார். அதில் மின் மோட்டார், பம்ப் செட் அமைத்து மற்றொரு போர்வெல் அமைத்து அனுபவித்து வருகிறார். 3ம் அயிட்டச் சொத்திலும் இந்தப் பிரதிவாதியால் போர்வெல் அமைக்கப்பட்டது. தாவாச் சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதால் மின் இணைப்பும் 1ம் பிரதிவாதி பெயரிலேயே ஏற்பட்டது. இந்தப் பிரதிவாதி மேற்படி சொத்துக்களில் மின் மோட்டார் மற்றும் போர்வெல் அமைக்க அதிக செலவு செய்துள்ளார். மேலும் பல லட்ச ரூபாய் செலவு செய்து 3ம் அயிட்டச் சொத்தில் புதியதாக வீடு கட்டி மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார். மூன்றாவது தவணையையும் உரிய காலத்திற்குள் செலுத்திவிடுவார்.

32. தாவாச் சொத்தானது 47, தேசிய நெடுஞ்சாலை, சித்தோடு, பெருந்துறை அருகே அமைந்துள்ளது. பெருந்துறையைச் சுற்றிலும் ரியல் எஸ்டேட் வியாபாரம் நடந்து வருகிறது. அதனால் தாவாச் சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டது. அதனால் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, பேங்க் ஆப் பரோடா, யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றில் சுமார் 20 லட்சம் வைப்பீடு செய்துள்ளார். 1ம் பிரதிவாதி வயது மூப்பின் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். இந்தப் பிரதிவாதியின் மனைவிக்கும் தாயாருக்கும் இடையே வாதிகளால் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. அதனால் 1, 2 பிரதிவாதிகளுக்கும் அவர்களுடைய தகப்பனாருக்கும் இடையே இருந்த சுமூகமான உறவு தடைபட்டுவிட்டது. நண்பர்கள் மூலமாக சமாதானம் செய்யப்பட்டும் முயற்சி எடுபடவில்லை. வாதிகளுக்கு

மேற்படி ரூ.20 லட்ச தொகையை பெரும் எண்ணம் இருந்தது. அதை இந்தப் பிரதிவாதி தடுத்துவிட்டார். அ.வ.எண்.221/2010 என்ற வழக்கை வாதிகள் தாக்கல் செய்து அது இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நடைபெற்று வருகிறது. வாதிகளுக்கு ஏற்கனவே ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு விபரம் தெரியும். 1ம் பிரதிவாதி ரூ.10 லட்சத்தைப் பெற்றுக் கொண்டு அவருடைய உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டார் என்பதும் வாதிகளுக்கு தெரியும். வாதிகளுக்கு திருமணம் நடைபெற்று அவரவருடைய கணவர் வீட்டில் வாழ்ந்து வருவதால் அவர்கள் கூட்டுக் குடும்ப அந்தஸ்தை இழந்துவிட்டார்கள். எனவே, இந்தப் பிரதிவாதியே தாவாச் சொத்தின் முழு உரிமையாளர் ஆவார்.

**33.** வாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியின் வயது மூப்பு காரணமாக அவரிடமிருந்து 05.06.2012 தேதியில் ஒரு ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். 1ம் பிரதிவாதிக்கு அந்த ஆவணத்தைக் குறித்து தெரியாது. வாதிகள் ஏற்படுத்திக் கொண்ட மேற்படி ஆவணம் நடைமுறைப்படுத்தப்படாதது, சட்டப்படியானதல்ல. 05.06.2012 தேதிய பாகப் பிரிவினைப் பத்திரம் மோசடியானது. இந்தப் பிரதிவாதி அதில் தரப்பினரல்ல. வாதிகள் தாவாச் சொத்தின் சுவாதீனத்தில் இல்லை. 05.06.2012 தேதிய பத்திரத்தின்படி வாதிகள் சொத்தின் மதிப்பை திருத்தம் செய்து கொண்டார்கள். அதனால் மேற்படி வழக்கு பெருந்துறை சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகியுள்ளது. 1ம் பிரதிவாதியின் டெபாசிட் தொகையை வாதிகள் எடுக்க முயற்சி செய்கிறார்கள். 1ம் பிரதிவாதி அவருடைய உடல்நலம் சரியில்லாத நிலையில் 98 வது வயதில் 02.10.2017 ல் இறந்துவிட்டார். அவரின் மனைவி மற்றும் மகள்கள் ஆகியோர் இந்தப் பிரதிவாதியை அவருடைய இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவிடாமல் தடுத்து விட்டார்கள். அதனால் அவருடைய பங்காளிகளை வைத்து இறந்து போனவரின் இறுதிச் சடங்குகளை செய்துள்ளனர். 05.06.2012 தேதிய பாகப் பிரிவினைப் பத்திரத்தின் அடிப்படையில் வாதிகள் தாவாச் சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்தார்கள். ஆகவே, தாவாச் சொத்து இந்தப் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கோரியும் வாதிகள் தாவாச் சொத்தில் இந்தப் பிரதிவாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியும் இந்தப் பிரதிவாதியால் அ.வ.எண்.19/2018 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனவே, மேற்படி வழக்கை அனுமதித்து வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

34. **<u>17.11.2025 தேதியிட்ட 2ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரை -யின் சுருக்கம்:-</u>**

வழக்குரை பாரா 6ல் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது. வாதிகளின் தகப்பனார் 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களில் அவருடைய 1/5 பங்கைப் பொருத்து வாதிகளுக்கு 05.06.2012 தேதிய பாகப் பிரிவினைப் பத்திரத்தின்படி கொடுத்துவிட்டதாக சொல்லப்படுவது தவறு. மேலும் மேற்படி 1/5 பங்கைப் பொருத்து வாதிகளின் தகப்பனார் தொகையைப் பெற்றுக் கொண்தாகச் சொல்வதும் தவறு. வாதிகளுக்கு தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்தில் 4/5 பங்கு இருப்பதாகச் சொல்லப்படுவது தவறு. தாவா 4ம் அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்பது தவறு. அதில் வாதிகளுக்கு 3/5 பங்கு என்று சொல்வது தவறு. வழக்குரை பாரா 6(சி)ல் சொல்லியுள்ள சங்கதிகள் இந்த பிரதிவாதியால் மறுக்கப்படுகிறது. வாதிகளுக்கு தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்தில் 4/5 பங்குள்ளதாக சொல்வது தவறு. வழக்குரை பாரா 9, 10ன் சங்கதிகள் தவறு. வாதிகளுக்கு தாவாச் சொத்தில் எவ்வித பங்குரிமையும் இல்லை. 05.06.2012 தேதிய பாகப் பிரிவினைப் பத்திரம் மோசடியானது. குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தில் 1ம் பிரதிவாதி அவருடைய பங்குரிமையை விட்டுக் கொடுத்து விட்டதால், தாவாச் சொத்து முழுவதும் இந்தப் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு முழு உரிமையாளராக இருந்து அனுபவித்து வருகிறார். மேற்படி குடும்ப ஏற்பாட்டின்படி வாதிகள் தாவாச் சொத்தில் உள்ள பங்குரிமையை விட்டுக்கொடுத்துவிட்டதால் வாதிகளுக்கு தாவாச் சொத்தில் எந்தவித பங்குரிமையும் இல்லை. 2000ம் வருடம் வைகாசி மாதத்திற்குப் பின்னிட்ட இந்தப் பிரதிவாதி தாவாச் சொத்தின் முழு உரிமையாளராக இருந்து அனுபவித்து வருகிறார். சொத்து விவரம் தவறு. அ.வ.எண்.19/2018ன் வழக்குரை மற்றும் இவ்வழக்கின் எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றை இத்துடன் பாகமாக ஏற்க வேண்டும். ஆகவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

35. **<u>மேற்கூறப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரைகள், கூடுதல் எதிர்வழக்குரைகள் மற்றும் வழக்காவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:</u>**

| | |
|---|---|
| 1. | 2000ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி 1ம் பிரதிவாதி அவரது பங்கைப் பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டரா? |

| | |
|---|---|
| 2. | வாதிகள் வழக்குரையில் கோரியபடி பாகப்பிரிவினைப் பரிகாரம் பெற உரியவர்களா? |
| 3. | வாதிகள் வழக்குரையில் கோரியபடி நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெற உரியவர்களா? |
| 4. | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன? |

**<u>01.09.2014 ம்தேதி கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது:</u>**

| | |
|---|---|
| 1. | 1 ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினரா? |

**<u>17.11.2025 ம்தேதி கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது:</u>**

| | |
|---|---|
| 1. | 05.06.2012 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் உண்மையானதா? செல்லத்தக்கதா? |
| 2. | 2 ம் பிரதிவாதி தாவா சொத்தின் முழு உரிமையாளாரா? |

**36.** மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் ஒரே தரப்பினர், ஒரே சொத்து என்பதால் இரண்டு வழக்குகளையும் ஒருசேர விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அ.வ.எண்.19/2018 ன் வாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதியப்பட்டு, இரண்டு வழக்குகளுக்கும் சேர்த்து அ.வ.எண்.19/2018 ல் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அவற்றை அ.வ.எண்.306/2019 வழக்கிற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் வாதி என்று குறிப்பிடுவது அ.வ.எண்.19/2018 ன் வாதியையும், பிரதிவாதிகள் என்று குறிப்பிடுவது அ.வ.எண்.306/2019 ன் வாதிகளையும் குறிக்கும்.

**37.** வாதி தரப்பில், வா.சா.1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.27 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.30 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

38. <u>அ.வ.எண். 306/2019 ன் எழுவினாக்கள் 1, 3:-</u>

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், வாதியும் பிரதிவாதிகளும் அ.வ.எண்.306/2019 ன் 1 ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டரின் வாரிசுகள் என்றும், தாவா 1 ம் அயிட்டச் சொத்து ஆதியில் மேற்படி 1 ம் பிரதிவாதி

பெரியண்ண கவுண்டரின் தகப்பனார் ரங்கைய கவுண்டர் வா.சா.ஆ.1 ன்படி கிரயம் பெற்ற சொத்து என்றும், தாவா 2ம் அயிட்டச் சொத்து பூர்வீகக் குடும்பச் சொத்துக்கள் என்றும், அச்சொத்து 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டர் மற்றவர்களுடன் ஏற்பட்ட பாகப் பிரிவினையில் 'பீ' ஷெட்டியூலாக ஒதுக்கப்பட்டதாகவும், அந்தப் பாகப் பிரிவினைப் பத்திரம் வா.சா.ஆ.2 என்றும், தாவா 3ம் அயிட்டச் சொத்து 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டரின் தாத்தா பெரிய கவுண்டருக்கு 11.82 ஏக்கர் பாத்தியப்பட்டது என்றும், அதில் பாதியை அவர் விற்றுவிட்டதாகவும், அந்த பாதிப் பங்கை 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டர் வா.சா.ஆ.7ன்படி கிரயம் பெற்றதாகவும், மேற்படி 11.82 ஏக்கர் வா.சா.ஆ.7ன்படி சொத்து முழுவதையும் வாதியும் 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டரும் அனுபவித்து வந்ததாகவும், மேற்படி சொத்துக்களைப் பொருத்து 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டர் குடும்ப ஏற்பாடு மூலமாக வாதிக்கு கொடுத்து -விட்டதாகவும், வாதி தாவாச் சொத்துக்களை முழு உரியையாளராக இருந்து அனுபவித்து வந்ததாகவும், பிரதிவாதிகளுக்கு திருமணத்தின்போதே சீர் வரிசைகள் செய்து -விட்டதாகவும், தாவாச் சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பாகப் பிரிவினை பத்திரம் பி.சா.ஆ.1ல் வாதி தரப்பினராக இல்லை என்தால் அந்த பாகப் பிரிவினை இந்த வாதியைக் கட்டுப்படுத்தாது என்றும், வாதியின் தகப்பனார் அவருடைய 1/5 பங்கைப் பொருத்து பிரதிவாதிகளுக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படுவது தவறு என்றும், வாதியின் தகப்பனார் உடல்நலம் சரியில்லாத நிலையில், பிரதிவாதிகள் அவருடைய வயது மூப்பை சாதகமாகக் கொண்டு பி.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி வாங்கிக் கொண்டதாகவும், அதில் அவருடைய பங்கிற்கு ரூ.1 லட்சம் கொடுத்ததாகச் சொல்லப்படுவதற்கு சாட்சியங்கள் முன்னிடப்படவில்லை என்றும், 3வது அயிட்டச் சொத்தைப் பொருத்து வாதி அவருடைய தனிப்பட்ட வருமானத்தைக் கொண்டு அவருடைய தகப்பனார் பெயரில் கிரயம் பெற்றதாகவும், வாதி, ஆடு, மாடு வியாபாரம் செய்தும் கோழி வியாபாரம் செய்தும் அந்த வருமானத்தைக் கொண்டு 3ம் அயிட்டச் சொத்தை கிரயம் பெற்றதாகவும், 2000ம் வருடம் வைகாசி மாதம் குடும்ப ஏற்பாடு ஏற்பட்டதில் மேற்படி தாவா 1முதல் 3 அயிட்டச் சொத்துக்ள் அனைத்தும் வாதியின் பங்கிற்கே அவருடைய தகப்பனாரால் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும் வாதியே தாவாச் சொத்தின் முழு உரிமையாளர் என்றும், பிரதிவாதிகளுக்கு எவ்வித பங்குரிமையும் இல்லை என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**39.** பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் பூர்வீகச் கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் என்றும், வாதி தரப்பில் சொல்லப்படுவதுபோல் குடும்ப ஏற்பாடு ஏற்படவில்லை என்றும் அதில் கலந்து கொண்ட பஞ்சாயத்தார்கள் யாரும் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றும், குடும்ப ஏற்பாடு ஆவணமாக எழுதப்படவில்லை என்றும், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வாதி அவருடைய தகப்பனாருக்கு ரூ.7 லட்சத்தை மூன்று தவணைகளாக கொடுத்ததாகச் சொல்லப்படும் சங்கதிகளுக்கு ஆதாரமாக ஆவண சாட்சியம் எதுவும் முன்னிடப்பட -வில்லை என்றும், 3ம் அயிட்டச் சொத்து வாதியின் தகப்பனார் பூர்வீகச் சொத்தின் வருமானத்தைக் கொண்டு கிரயம் பெற்ற சொத்து என்றும், வாதியும் பிரதிவாதிகளும் அவர்களுடைய தகப்பனாருடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்ததில் அவை யாவும் கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் என்றும், பொதுவில் அனுபவித்து வந்ததாகவும், வாதியின் தகப்பனார் வாதியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பிரதிவாதிகளின் பராமரிப்பில் இருந்து வந்ததில் பிரதிவாதிகளுக்கும் அவருடைய தகப்பனாருக்கும் இடையே பி.சா.ஆ.1 பாகப் பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதன்படி பிரரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் 4/5 பங்கு பாத்தியம் ஏற்படுவதாகவும், தாவா 4ம் அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்றும், அதில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பெற்றோர் வசித்து வந்து இறந்துவிட்ட நிலையில் அச்சொத்தில் வாதி, பிரதிவாதிகளுக்கு தலா ¼ பங்கு பாத்தியம் இருப்பதாகவும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**40.** வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் உறவுமுறை குறித்து இருவழக்குகளிலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. அ.வ.எண்.306/2019 வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் 1ம் பிரதிவாதியாக உள்ளார். அவர் அவ்வழக்கு நிலுவையில் இறந்துவிட்டார். பின்னிட்டு அவருடைய மனைவியும் இறந்துவிட்டார். ஆகவே இறந்துபோன 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டரின் வாரிசுகள் வாதி மற்றும் பிரதிவாதிகள் ஆவர்.

**41.** தாவா 1ம் அயிட்டச் சொத்தை 07.06.1908 தேதியிட்ட வா.சா.ஆ.1ன்படி அ.வ.எண்.306/2019ன் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ரங்கையா கவுண்டர் ஒரு குமாரசாமி என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற கிரயப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 2ம் அயிட்டச் சொத்து வாதியின் தகப்பனாருக்கும் மற்றவர்களுககும் இடையே ஏற்பட்ட பாகப் பிரிவினைப் பத்திரம் 12.02.1964 தேதியிட்ட வா.சா.ஆ.2ல் 'பீ' ஷெட்டியூலாக காட்டப்பட்டுள்ளது. 3ம் அயிட்டச் சொத்து வாதியின் தகப்பனாருக்கு

பூர்வீக வகையில் 11.82 ஏக்கர் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் பெரியண்ண கவுண்டர் பாதி சொத்தை (அரை பங்கு) விற்றுவிட்டதாகவும் அந்த பாதி சொத்தை திரும்ப வாதியின் தகப்பனார் 21.01.1987 தேதியிட்ட வா.சா.ஆ.7 ன்படி மீண்டும் கிரயம் பெற்றதில் 11.82 ஏக்கர் நிலமும் வாதியின் தகப்பனாருக்கே பாத்தியப்பட்டு அனுபவித்து வந்துள்ளார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளபட்டுள்ள சங்கதிகளாகும். அ.வ.எண்306/2019 ல் 4 ம் அயட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்து இவ்வழக்கில் வாதி தரப்பில் சொத்து விவரத்தில் காட்டப்படவில்லை எனினும் மேற்படி சொத்து பூர்வீக வீடு என்பதும், அதில் உபயவாதிகளின் பெற்றோர் இறக்கும்வரை குடியிருந்து வந்தார்கள் என்பதும் அதைக் குறித்து ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார்கள் என்பதும் இருரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

**42.** வாதி தரப்பில் 1, 2 அயிட்டச் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்றும், 3 ம் அயிட்டச் சொத்து 21.01.1987 தேதியிட்ட வா.சா.ஆ.7 ன்படி தன்னுடைய தனிப்பட்ட வருமானத்தைக் கொண்டு தன் தகப்பனார் பெயரில் கிரயம் பெற்றதால் அது தன்னுடைய சுயார்ஜித சொத்து என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 1, 2 அயிட்டச் பூர்வீக சொத்துக்கள் மானாவரி பூமி என்றும், மேற்படி மானாவாரி பூமியில் போதுமான வருமானம் இல்லை என்றும், ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை சந்தையில் வியாபாரம் செய்து வருமானம் ஈட்டியதாகவும் அந்த வருமானத்தைக் கொண்டு தாவா 3 ம் அயிட்டச் சொத்தை கௌரவத்திற்காக தன் தகப்பனார் பெயரில் கிரயம் பெற்றதாகவும் சொல்லப்பட்டுள்ளது. வாதிக்கு மேற்படி 3 ம் அயிட்டச் சொத்தைக் கிரயம் வாங்கும் அளவுக்கு பொருளாதார வசதி இருந்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அவருடைய தகப்பனார் பெயரில் கிரயம் பெற்றதாகச் சொல்லப்பட்டிருப்பினும் மேற்படி 1, 2 அயிட்டச் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்களாக உள்ள நிலையில், வாதி தரப்பு சாட்சியத்தின்படி ஏற்கனவே தாவா 3 வது அயிட்டச் சொத்து கிரயம் வாங்கும் முன்பாக வாதியின் தகப்பனாருக்கு 14-1/2 ஏக்கர் இருந்துள்ள நிலையில், வாதியின் வருமானத்தைக் கொண்டு தாவா 3 ம் அயிட்டச் சொத்து தகப்பனார் பெயரில் அந்தஸ்திற்காக கிரயம் வாங்கிதாகச் சொல்லப்படுவது ஏற்கத்தக்கதாக இல்லை. மேற்படி தாவா 1, 2 அயிட்டச் சொத்துக்களின் வருமானத்தைக் கொண்டு வாதியின் தகப்பனார் கிரயம் பெற்றுள்ளார் என்பதாகவே கருதப்படும். எனவே, தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் பூர்வீக கூட்டுக் குடும்பச் சொத்துக்களாக இருந்துள்ளது.

**43.** வாதி தரப்பில் தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களைப் பொருத்து அவருடைய தகப்பனார் பெரியண்ண கவுண்டர் பஞ்சாயத்தார்கள் பொன்முடி, அர்ச்சுனன் மேட்டுக்காட்டுத் தோட்டம், மூங்கில்பாளையம் பழனிசாமி, பொன்முடி குளுக்கான தோட்டம், சதாசிவம் ஆகியோர் முன்னிலையில், 2000 ம் வருடம் வைகாசி மாதத்தில் ஒரு குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டதில் தாவாச் சொத்துக்கள் அனைத்தையும் வாதியே எடுத்துக் கொண்டதாகவும் அவருடைய தகப்பனாருக்கு ரூ.10 லட்சம் கொடுத்துவிடுவதாக முடிவு செய்யப்பட்டு 3 தவணைகளாக வாதியின் தகப்பனார் பெரியண்ண கவுண்டருக்கு வாதி கொடுத்துவிட்டதாகவும் அதன்படி வாதியின் தகப்பனார் தாவாச் சொத்தின் உரிமையை கொடுத்துவிட்டதாகவும் அதனால் வாதி தாவாச் சொத்துக்களுக்கு உரிமையாளர் என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் வாதி தரப்பில் நிரூபிக்கப் -பட்டுள்ளதா? என்பதைக் குறித்து பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

**44.** மேற்படி குடும்ப ஏற்பாடு நடந்ததாகச் சொல்லப்படும் வருடம் வைகாசி 2000 என்றும், ஏப்ரல் 2000 என்றும் இரண்டு வழக்குகளிலும் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குடும்ப ஏற்பாட்டைப் பொருத்து வாதி தன் சாட்சியத்தில்,

> **"என் சகோதரிகள் பாகப் பிரிவினை கோரி அ.வ.எண்.306/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் என் தந்தை 1 ம் பிரதிவாதி. நான் 2 ம் பிரதிவாதி. நான், என் தந்தை, என் சகோதரிகள் அனைவரும் சேர்ந்து குடும்ப ஏற்பாடு செய்து கொண்டதாகச் சொல்லியிருக்கிறேன். குடும்ப ஏற்பாட்டில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் பொன்முடியைச் சேர்ந்த பழனிசாமி என்று ஒரே பெயரைதான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரையில் பழனிசாமி, அர்ஜுனன், சதாசிவம் மற்றும் பலர் பஞ்சாயத்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய குடும்பத்தில் குடும்ப ஏற்பாடு செய்யும் அளவிற்கு சண்டை சச்சரவு வரவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்தார் வைத்து பஞ்சாயத்து பேசும் அளவிற்கு பிரச்சினை எதுவும் இல்லை என்றால் சரிதான். பஞ்சாயத்தில் என் அப்பா தோட்டத்தை என்னையே ஓட்டிக் கொள்ளும்படி சொன்னார். ரூ.10 லட்சம் அவருக்கு கொடுக்கும்படி சொன்னார். நான் ரூ.10 லட்சம் பணம் கேட்டார் என்ற விவரத்தை அ.வ.எண்.306/2019 வழக்கில் நான் சொல்லவில்லை. இந்த வழக்கின் பிராதிலும் சொல்லவில்லை. என் சகோதரி தாக்கல் செய்த**

**வழக்கிலும் நான் தாக்கல் செய்த வழக்கிலும் என் தந்தை குடும்ப ஏற்பாடும் நடக்கவில்லை, ரூ.10 லட்சம் பணமும் வாங்கவில்லை என்று எதிர்வாதம் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாடு ஏற்பட்டதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனிப்பட்ட சொத்தாக பாவித்து எவ்வித பாராதீனமும் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தைக்கு முதலில் ரூ.3 லட்சம் பணம் கொடுத்ததாகவும் பின்னிட்டு ரூ.3 லட்சமும், பின்னிட்டு 4 லட்சமும் கொடுத்ததாகச் சொல்லப்படுவதற்கு வங்கி ஆவணம் ஏதாவது உள்ளதா? என்றால் இல்லை."**

என்று கூறியுள்ளார்.

**45.** வாதி தரப்பில் ஒரு ஈஸ்வரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மேற்படி குடும்ப ஏற்பாட்டில் கலந்து கொண்ட நபரல்ல. வாதி தரப்பில் குடும்ப ஏற்பாடு நடந்ததாகச் சொல்லப்படும் அர்ஜுனன், பழனிசாமி, சதாசிவம் ஆகியோர் இவ்வழக்கில் வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. குடும்ப ஏற்பாடு சம்பந்தமான எழுத்து மூலமான ஆவணமும் இல்லாத நிலையில் வாய்மொழி சாட்சியத்தின மூலம் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதி தரப்பில் வாதியின் தகப்பனார் குடுமப ஏற்பாடு செய்யப் போவதாக சொன்னதன்பேரில் மேற்படி குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ள சங்கதி குறித்து சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அ.வ.எண்.306/2019 ல் 1 ம் பிரதிவாதியான பெரியண்ண கவுண்டர் வாதியின் தகப்பனார் மேற்படி குடும்ப ஏற்பாடு நடந்ததாக அவருடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை.

**46.** வாதியின் தகப்பனார்வழிப் பாட்டி வள்ளியம்மாளுக்கு 12.04.1955 தேதியிட்ட வா.சா.ஆ.8 கிரய ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்தைப் பொருத்து வாதி, பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடைய தகப்பனார் பெரியண்ண கவுண்டர் ஆகியோர் 19.06.2000 தேதியிட்ட வா.சா.ஆ.9 ன்படி ஒரு ராசப்ப கவுண்டருக்கு கிரயம் கொடுத்துவிட்டதாகவும் அந்தக் கிரய தொகையை அவர்களின் தகப்பனார் மற்றும் பிரதிவதிகள் பெற்றுக் கொண்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அதனைப் பொருத்து வாதி தன் சாட்சியத்தில்,

**"குடும்ப ஏற்பாட்டில் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 27**

**சென்டை விற்று அதில் வரும் பணத்தைக் கொண்டு என் சகோதரிகள் மற்றும் தந்தைக்கு தலா பாதி கொடுத்துவிடுவதாக எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்தப் பணத்தை என் தந்தை ஏற்கனவே அவர் வங்கிக் கணக்கில் உள்ள தொகையுடன் வைப்பீடு செய்துவிடுவதாக பேசப்பட்டது என்றால் சரிதான். விற்ற 2.27 செண்ட் என் குடும்ப சொத்து அல்ல என்றால் சரிதான் என் தந்தைவழிப் பாட்டி சொத்து. ஏப்ரல் 2000ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி சொத்தை விட்டுக் கொடுத்தது என் தந்தை மட்டுமே என்று என்னடைய எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.9ல் காட்டப்பட்ட கிரயத் தொகை ரூ.1,12,500/- என்றால் சரிதான். ஆனால் ரூ.3 லட்சத்திற்கு விற்கப்பட்டது."**

என்று கூறியுள்ளார். மேற்படி தந்தைவழிப் பாட்டி சொத்தைப் பொருத்து வாதி, பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடைய தகப்பனார் பெரியண்ண கவுண்டர் ஆகியோர்கள் சேர்ந்து விற்றதில் வந்த தொகையை சகோதரிகளுக்கு பாதி கொடுத்துவிடுவதாக குடும்ப ஏற்பாட்டில் பேசப்பட்டதாகச் சொல்லப்பட்டிருப்பினும் அதனைக் குறித்து வாதி தரப்பில் சாட்சிகள் எதுவும் முன்னிடப்படவில்லை.

47. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், AIR 1995 SUPREME COURT 1728ல் "Digambar Adhar Patil, Appellant v. Devram Girdhar Patil (died) and another, Respondents" என்ற வழக்கில்,

> "....Even a family arrangement is enough to effectuate the partition between co-parceners and to confer right to a separate share and enjoyment thereof."

என்ற முன் தீர்ப்பினைச் சுட்டிக்காட்டி வாதுரைக்கப்பட்டிருப்பினும் வாதி தரப்பில் மேற்படி குடும்ப ஏற்பாடு எந்த தேதி, மாதம், வருடம் ஏற்பட்டது? அதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது? என்பது குறித்த விவரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. பஞ்சாயத்தார்கள் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. வாதியின் தகப்பனார் தாவாச் சொத்தைப் பொருத்து ரூ.10 லட்சம் பெற்றுக் கொண்டு வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படும் சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ரூ.10 லட்சத்தை 3

தவணையாக அவருடைய தகப்பனாருக்கு கொடுத்ததாகச் சொல்லப்படுவதற்கும் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் பெரியண்ண கவுண்டர் மற்றும் அவருடைய தகப்பனார் வழிப் பாட்டிக்கு பூர்வீகச் சொத்துக்களாக உள்ள நிலையில், வாதியும் பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வந்ததில் பிரதிவாதிகளும் கூட்டுப் பங்குதாரர்கள் என்ற நிலையில் மேற்படி குடும்ப ஏற்பாட்டில் பிரதிவாதிகளின் பங்குரிமை குறித்து பேசப்பட்டதா? என்பது பொருத்து வாதி தரப்பில் விளக்கம் எதுவும் சொல்லப்படவில்லை. வாதி தரப்பில் தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் அனைத்தும் அவருடைய தகப்பனாருக்கே பாத்தியப்பட்டது என்றும் அவற்றை வாய்மொழியாக விட்டுக் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படுவது ஏற்கத்தக்கதல்ல. வாதி மற்றும் பிரதிவாாதிகளுக்கு பூர்வீகக் கூட்டுக் குடும்பச் சொத்துக்களாக உள்ள நிலையில் பிரதிவாதிகளின் பங்குரிமையை குறித்து முடிவு செய்யாமல் குடும்ப ஏற்பாடு செய்ததாகச் சொல்வது ஏற்கத்தக்கதல்ல. வாதி தரப்பில் சொல்லப்படும் குடும்ப ஏற்பாடு வாதி தரப்பில் சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்படாத நிலையில், தாவாச் சொத்துக்கள் கூட்டுக் குடும்பச் சொத்துக்களாக உள்ள நிலையில், குடும்ப ஏற்பாட்டல் பிரதிவாதிகளின் பங்குரிமை குறித்து சொல்லப்படாத நிலையில் மேற்படி குடும்ப ஏற்பாடு ஏற்படவில்லை என்பதும் அதன் மூலம் வாதிக்கு தாவாச் சொத்தின் பேரில் உரிமை ஏற்படவில்லை என்பதும் தெரிய வருகிறது.

**48.** குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் தாவாச் சொத்தில் வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்பட்டதாக வாதி தரப்பில் வா.சா.ஆ.13 முதல் 26 வரை தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள், போர்வேல்லுக்கான ரசீது, வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மோட்டார் பழுது பார்ப்பு ரசீதுகள் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டிருப்பினும் இவை யாவும் அ.வ.எண்.306/2019 (முந்தைய அ.வ.எண்.222/2010) வழக்கிற்குப் பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்களாக உள்ளது. வாதி தன் சாட்சியத்தில்,

> **“1ம் அயிட்டச் சொத்தில் உள்ள மின் இணைப்பு என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். எத்தனை மின் இணைப்பு உள்ளது என்றால் 2 உள்ளது. அது என் தந்தை பெயரில்தான் உள்ளது. தாவாச் சொத்துக்கள் நாளதுவரை என் அப்பா பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2ம் அயிட்டச் சொத்தில் பொதுக் கிணறு உள்ளது. அதில் மின் இணைப்பு இருந்தது. 20 வருடத்திற்கு முன்பாக எடுத்துச் சென்றுவிட்டார்கள். 1, 2**

**அயிட்டச் சொத்துக்கள் மானாவாரி பூமிதான். 3ம் அயிட்டச் சொத்தும் என் அப்பா பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2000ல் சொத்து என் பெயரில் வந்ததாகச் சொல்லப்பட்ட பிறகு நாளது வரை வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து பட்டா பெறவில்லை என்றால் எனக்கும் என் அப்பாவிற்கும் மன வருத்தம் ஏற்பட்டதால் பட்டா வாங்கவில்லை. என் அப்பா பெயரில் கிரயம் வாங்கப் -பட்டது. அப்போது எங்களுக்கு 14-1/2 எக்கர் விஸ்தீரண சொத்து இருந்தது. நான் சொத்தை அனுபவித்து வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.”**

என்று கூறியுள்ளார். வாதி தரப்பில் மேற்படி தாவா சொத்தை பொறுத்து 2000ல் குடும்ப ஏற்பாடு ஏற்பட்டதாக சொல்லப்பட்டு இருப்பினும் தாவா சொத்துக்களின் வருவாய்துறை ஆவணங்கள் அனைத்திலும் வாதியின் தகப்பனார் பெயரில் இருந்து வரும் நிலையில் வாதி அதை தனித்து அனுபவித்து வருவதாகவும், வாதியே உரிமையாளர் என்று கூறுவதும் ஏற்கத்தக்கதாக இல்லை. தாவா சொத்துக்கள் வாதிக்கே உரிமையானது என்று வாதி தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. வாதிக்கும், அவரது தகப்பனாருக்கு இடையே ஏற்பட்ட குடும்ப ஏற்பாடு சங்கதிகள் குறித்து வாதி தரப்பில் உரிய சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் தாவா சொத்தை பொறுத்து குடும்ப ஏற்பாடு ஏற்படவில்லை என்றும், அதன் அடிப்படையில் வாதியின் தகப்பனார் 1ம் பிரதிவாதி அவரது பங்கை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக விடுதலை செய்து கொடுக்கவில்லை என்று எழுவினா 1க்கும் , தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் பூர்வீக கூட்டு குடும்ப மற்றும் பூர்வீக சொத்துக்கள் என்பதால் வாதியின் தகப்பனார் இறந்துவிட்ட நிலையில் வாதிக்கும், அவரது சகோதரிகளான பிரதிவாதிகளுக்கும் தலா ¼ பங்கு பாகம் ஏற்படுகிறது என்றும், மேற்படி சொத்துக்களில் பிரதிவாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாகவே கருதப்படும் என்றும், எனவே தாவா சொத்துக்களை பொறுத்து வாதி எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாது என்று பிரதிவாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று எழுவினா 3க்கும் விடை காணப்படுகிறது.

49. <u>அ.வ.எண்.19/2018ன் எழுவினா 1 முதல் 3, அ.வ.எண்.306/2019ன் எழுவினா 2 மற்றும் 17.11.2025 தேதியிட்ட கூடுதல் எழுவினாக்கள் 1, 2,</u>

பிரதிவாதிகள் தரப்பில், தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களைப்

பொருத்து அவருடைய தகப்பனார் இவ்வழக்கு நிலுவையில் 05.06.2012 தேதியிட்ட பி.சா.ஆ.1 ன்படி ஒரு பாகப் பிரிவினை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டதாகவும், அந்த பாகப் பிரிவினைப் பத்திரத்தில் அவருடைய 1/5 பங்கைப் பொருத்து பிரதிவாதிகளுக்கு கொடுத்துவிட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பி.சா.ஆ.1 ல் வாதி தரப்பினராக இல்லை. வாதியும் கூட்டுக் குடும்ப உறுப்பினராக உள்ள நிலையில், ஒரு கூட்டுக் குடும்ப உறுப்பினரை தரப்பினராகச் சேர்க்காமல் பிரதிவாதிகள் தங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட பாகப் பிரிவினைப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. பி.சா.ஆ.1 சட்டப்படியான ஆவணம் அல்ல என்பதால் அதனடிப்படையில் பிரதிவாதிகள் பங்குரிமை கோர இயலாது. இவ்வழக்கு நிலுவையில் வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் பெரியண்ண கவுண்டர் இறந்துவிட்ட நிலையில், அவருடைய வாரிசுகளாக வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மட்டுமே உள்ள நிலையில், 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் என்பதால் அதில் வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தலா ¼ பங்குரிமை ஏற்படுகிறது.

**50.** வாதி தரப்பில் மேற்படி சகோதரிகளான பிரதிவாதிகளுக்கு தந்தைவழிப் பாட்டி வள்ளியம்மாளின் சொத்தை விற்ற தொகையில் பங்கு கொடுத்துவிட்டதாகவும், திருமணத்தின்போது சீர் வரிகளை செய்ததாகவும் சொல்லப்பட்டிருப்பினும் தாவாச் சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக் குடும்பச் சொத்துக்களாக உள்ள நிலையில் பிரதிவாதிகள் கூட்டுப் பங்குதாரர்கள் என்பதால் அவர்களது பங்கைப் பொருத்து வாதி மறுக்க இயலாது.

**51.** அ.வ.எண்.306/2019 வழக்கின் 3 ம் வாதியும் அ.வ.எண்.19/2018 ன் 3 ம் பிரதிவாதியுமான தனலட்சுமி என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் அவர் தன் சாட்சியத்தில், பி.சா.ஆ.1 ன் அடிப்படையில் பங்குரிமை இருப்பதாக சொல்லப் -பட்டிருப்பினும் பி.சா.ஆ.1 ல் கூட்டுப் பங்குதாரரான வாதியை தரப்பினராக சேர்க்கப்படாமல் எழுதப்பட்ட ஆவணம் செல்லத்தக்கதல்ல என்பதால் அதனைப் பொருத்து அவருடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல.

**52.** பி.சா.1 தரப்பில் பி.சா.ஆ.1 க்கு பின்னிட்டு தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களைப் பொருத்து பட்டா மாறுதல் உத்தரவு, 'அ' பதிவேடு நகல், கந்தாய ரசீது போன்ற வருவாய்த்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பினும் பி.சா.ஆ.1 அ.வ.எண்.306/2019 (அ.வ.எண்.222/2010) வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்பட்டுள்ள நிலையில் அது பி.சா.ஆ.1 வாதியைக் கட்டுப்படுத்தாது என்பதால் மேற்படி

பி.சா.ஆ.1 ன் அடிப்படையில் பிரதிவாதிகள் பங்குரிமை கோர இயலாது. எனவே, வாதி தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்களின்படி தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்பதால், அதில் பிரதிவாதிகளுக்கு தலா ¼ பங்குரிமை ஏற்படுகிறது என்றும், அ.வ.எண்.306/2019 ல் 4 ம் அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்பதால் அதில் உபயவாதிகளுக்கு தலா ¼ பங்குரிமை ஏற்படுகிறது என்றும், எனவே, தாவாச் சொத்துக்கள் வாதிக்குப் பாத்தியப்பட்டது என்று வாதி கோரும் விளம்புகைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. என்று அ.வ.எண்.19/2018 ன் எழுவினா 1, மற்றும் அ.வ.எண்.306/2019 ன் 17.11.2025 தேதியிட்ட கூடுதல் எழுவினா 2 க்கும், கூட்டுப் பங்குதாரர்களான பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கதல்ல என்று அ.வ.எண்.19/2018 ன் எழுவினா 3 க்கும், தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களைப் பொருத்து இவ்வழக்கு நிலுவையில் 05.06.2012 தேதியிட்ட பி.சா.ஆ.1 ன்படி ஏற்பட்ட பாகப் பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அ.வ.எண்.306/2019 ன் 17.11.2025 தேதியிட்ட கூடுதல் எழுவினா 1 க்கும், அ.வ.எண்.19/2018 ன் எழுவினா 2 க்கும், மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்பதால் அதனடிப்படையில் பிரதிவாதிகள் பங்குரிமை கோர இயலாது என்றும், இவ்வழக்கு நிலுவையில் வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் பெரியண்ண கவுண்டர் இறந்துவிட்ட நிலையில், அவருடைய வாரிசுகளாக வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மட்டுமே உள்ள நிலையில், 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் என்பதால் அதில் வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தலா ¼ பங்கு உள்ளது என்றும் 4 ம் அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்பதால் அதில் உபயவாதிகளுக்கு தலா ¼ பங்கு உள்ளது என்றும் அ.வ.எண்.306/2019 ன் எழுவினா 2 க்கும் தீர்வு காணப்படுகிறது.

53. <u>அ.வ.எண்.306/2019 ன் 01.09.2014 தேதியிட்ட கூடுதல் எழுவினா 1</u>

1 ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் 05.06.2012 ம்தேதி வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுடன் ஏற்பாடு செய்து கொண்டு ரூ.1 லட்சம் பெற்றுக் கொண்டு தாவாச் சொத்துக்களைப் பொறுத்து வாதிகளுக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் பிரிவினை செய்து கொடுத்துவிட்டதாகவும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் 'பீ' ஷெட்டியூல் சொத்து வாதிகளுக்கு கூட்டாக பிரிவினை செய்து கொடுத்து சுவாதீனம் பெற்றுக் கொண்டதாகவும், தாவாச் சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பிரிவினை செய்யப்பட்டு விட்டதால் மீண்டும் பிரிவினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை

என்றும், இந்த வழக்கு அவசியமற்ற தரப்பினர் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள போதும் அதன் பின்னிட்டு 1ம் பிரதிவாதி பெரியண கவுண்டர் இறந்துவிட்டதால் வாதியும் பிரதிவாதிகளும் வாரிசுகள் என்பதாலும், மேற்படி 05.06.2012 தேதியிட்ட பாகப் பிரிவினைப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று தீர்வு காணப்பட்டுள்ளதால், 1ம் பிரதிவாதி பெரியண்ண கவுண்டரை தரப்பினரைச் சேர்க்கப்பட்டுள்ளதால் வழக்கு பாதிக்கப்படவில்லை என்று இந்த கூடுதல் எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

54. <u>அ.வ.எண்.19/2018ன் எழுவினா 4 மற்றும் அ.வ.எண்.306/2019ன் எழுவினா 4</u>

வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்று அ.வ.எண்.19/2018ன் எழுவினாக்கள் 1 மற்றும் 3க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால் அ.வ.எண்.19/2018ன் வாதிக்கு வேறு பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்று அ.வ.எண்.19/2018ன் எழுவினா 4க்கும், 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் என்பதால் அதில் வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தலா ¼ பங்கு உள்ளது என்றும் 4ம் அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்பதால் அதில் உபயவாதிகளுக்கு தலா ¼ பங்கு உள்ளது என்றும் அ.வ.எண்.306/2019ன் எழுவினா 2க்கும் தீர்வு காணப்பட்டு பாகப் பிரிவினைப் பரிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் அ.வ.எண்.306/2019ன் வாதிகளுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டியதில்லை என்று அ.வ.எண்.306/2019ன் எழுவினா 4க்கும் தீர்வு காணப்படுகிறது.

<u>அ.வ.எண்.19/2018</u>

**முடிவாக,** வாதி கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இவ்வழக்கை தள்ளுபடி செய்தும், வழக்கின் தன்மையையும் தரப்பினர்களின் உறவுமுறையையும் கருத்திற்கொண்டு தரப்பினர்கள் அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

<u>அ.வ.எண்.306/2019</u>

**முடிவாக,** இந்த வழக்கை அனுமதித்து வாதிகள் வழக்குரையில் கோரியுள்ளபடி தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்பதால், அதில் வாதிகளுக்கு தலா ¼ பங்கைப் பொருத்தும்,

(2) தாவா 4ம் அயிட்டச் சொத்து பூர்வீக வீடு என்பதால் அதில் உபயவாதிகளுக்கு தலா ¼ பங்கைப் பொருத்தும் பாகப் பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்தும்,

(3) வாதிகளுக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி 2ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களின் எந்த ஒரு பகுதியைப் பொருத்தும் இறுதியான பாகம் ஏற்படும் வரை எந்தவித வில்லங்க விவகாரமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கியும், வழக்கின் தன்மையையும் தரப்பினர்களின் உறவுமுறையையும் கருத்திற்கொண்டு தரப்பினர்கள் அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த பொது தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் வருடம் மார்ச் மாதம் 23ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.23 19:27:08 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

**<u>சான்றாவணப் பட்டியல்</u>**

**<u>வாதி தரப்பில்:</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.06.1908 | ரங்கய்ய கவுண்டர் பெயரில் உள்ள கிரயப் பத்திரம். | பதிவு நகல் |
| வா.சா.ஆ.2 | 12.02.1964 | பெரியண்ண கவுண்டர் மற்றும் பலருக்குள் ஏற்பட்ட பாகப் பிரிவினை பத்திரம். | பதிவு நகல் |
| வா.சா.ஆ.3 | 05.04.1956 | பெரியண்ண கவுண்டர் ரங்கசாமி கவுண்டருக்கு போகியத்திற்கு விட்டதற்கான பதிவு நகல். | பதிவு நகல் |
| வா.சா.ஆ.4 | 19.05.1972 | சின்னமுத்துசாமி கவுண்டர் கொழந்தை -யம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற கிரயப் பத்திரம். | அசல் |
| வா.சா.ஆ.5 | 12.07.1982 | கொழந்தாயம்மாள் வகையறாவுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம். | பதிவு நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.6 | 16.02.1982 | சின்னசாமி இந்திராணியிடமிருந்து கிரயம் பெற்ற கிரயப் பத்திரம். | பதிவு நகல் |
| வா.சா.ஆ.7 | 21.01.1987 | பெரியண்ண கவுண்டர் கொளந்தாயம்மாள் வகையறாவிடம் கிரயம் பெற்ற கிரய பத்திரம். | அசல் |
| வா.சா.ஆ.8 | 12.04.1955 | வள்ளியம்மாள் ரங்க கவுண்டரிடமிருந்து கிரயம் பெற்ற கிரயப் பத்திரம். | பதிவு நகல் |
| வா.சா.ஆ.9 | 19.06.2000 | பெரியண்ண கவுண்டர் வாதி பிரதிவாதி அனைவரும் ஒரு ராசப்ப கவுண்டர் எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரம். | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | 02.10.2017 | பெரியண்ண கவுண்டரின் இறப்பு சான்றிதழ். | நகல் |
| வா.சா.ஆ.11 | 05.10.2010 | அ வ எண்.222/2010 பிராது சார்பு நகல். | நகல் |
| வா.சா.ஆ.12 | 05.06.2012 | பெரியண்ண கவுண்டர் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் செய்து கொண்ட பாகப் பிரிவினை பத்திரம். | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | 31.01.2001 | வாதி பெயரில் உள்ள கந்தாய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.14 | 27.02.2002 | வாதி பெயரில் உள்ள கந்தாய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.15 | 24.03.2003 | வாதி பெயரில் உள்ள கந்தாய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.16 | 22.06.2006 | வாதி பெயரில் உள்ள கந்தாய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.17 | 26.02.2011 | வாதியின் வீட்டிற்கு பொன்முடி பஞ்சாயத்தால் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது. | நகல் |
| வா.சா.ஆ.18 | 27.03.2013 | வாதியின் வீட்டிற்கு பொன்முடி பஞ்சாயத்தால் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது. | நகல் |
| வா.சா.ஆ.19 | 28.06.2003 | முருகன் போர்வெல் வழங்கிய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.20 | 14.08.2001 | செல்வம் டிரேடர்ஸ் சப்மெரிசிபள் பம்ப் வாங்கிய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.21 | 06.11.2004 | ஆக்குவா சப் இன்ஜினியரிங் பழுது சரி செய்யப்பட்ட ரசீதுகள். | அசல் |
| வா.சா.ஆ.22 | 30.12.2006 | ஆக்குவா சப் இன்ஜினியரிங் பழுது சரி செய்யப்பட்ட ரசீதுகள். | அசல் |
| வா.சா.ஆ.23 | 14.09.2009 | பம்ப்செட் பழுது சரி செய்ததற்கான கட்டண ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.24 | 08.10.2009 | பெருந்துறை விஜயலட்சுமி எலெக்டிக்கல்ஸ் வழங்கிய பில். | அசல் |
| வா.சா.ஆ.25 | 14.03.2015 | பழுது சரி செய்ததற்கான ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.26 | 09.10.2009 | மகாலட்சுமி டிரேடர்ஸ் வழங்கிய ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.27 | --- | பாத்திய உடன்படிக்கை அசல். | அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பில்:</u>

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 05.06.2012 | பெரியண்ண கவுண்டர் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் செய்து கொண்ட பாகப் பிரிவினை பத்திரம். | அசல் |
| பி.சா.ஆ.2 | 24.03.2017 | பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.3 | 15.02.2019 | பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.162. | கணினி நகல் |
| பி.சா.ஆ.4 | 19.01.2017 | பெரியண கவுண்டர் பெயரில் உள்ள புல எண்.6/2 க்கான பட்டா எண்.163. | கணினி நகல் |
| பி.சா.ஆ.5 | 15.02.2019 | பெரியண கவுண்டர் பெயரில் உள்ள புல எண்.2/1, 2 க்கான பட்டா எண்.194. | கணினி நகல் |
| பி.சா.ஆ.6 | 15.02.2019 | புல எண்.3/3 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.7 | 15.02.2019 | புல எண்.3/5 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.8 | 15.02.2019 | புல எண்.4/5 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.9 | 15.02.2019 | புல எண்.3/1 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.10 | 15.02.2019 | புல எண்.4/17 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.11 | 15.02.2019 | புல எண்.4/8 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.12 | 15.02.2019 | புல எண்.4/2 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.13 | 15.02.2019 | புல எண்.4/12 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.14 | 15.02.2019 | புல எண்.2/1 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.15 | 15.02.2019 | புல எண்.2/2 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.16 | 15.02.2019 | புல எண்.6/2 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.17 | 03.03.1998 | பட்டா எண்கள்.162, 163, 194, 311, 351, 398 க்கான பெரியண கவுண்டர் பெயரில் உள்ள கந்தாய ரசீது. | அசல் |

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.18 | 01.04.2009 | பட்டா எண்கள்.162, 163, 194, 311, 351, 398 க்கான பெரியண கவுண்டர் பெயரில் உள்ள கந்தாய ரசீது. | அசல் |
| பி.சா.ஆ.19 | 28.12.2011 | பெரியண்ண கவுண்டர் தனது விவசாய பூமியில் அத்துமீறி மண் எடுப்பதை தடுக்கக் கோரி ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குனருக்கு கொடுத்த விண்ணப்பம். | நகல் |
| பி.சா.ஆ.20 | 11.03.2013 | பெரியண்ண கவுண்டர் தன்னுடைய மகன் வாதி விஜயபுரி மீது பெருந்துறை, காவல்நிலைய உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனு. | நகல் |
| பி.சா.ஆ.21 | 11.03.2013 | புகார் மனு ஏற்புச் சான்றிதழ். | அசல் |
| பி.சா.ஆ.22 | 01.03.1992 | ருக்குமணியின் திருமண அழைப்பிதழ். | அசல் |
| பி.சா.ஆ.23 | 08.06.1997 | தனலட்சுமியின் திருமண அழைப்பிதழ். | அசல் |
| பி.சா.ஆ.24 | 03.08.1972 | புல எண்.2 ன் புல வரைபடம். | உண்மை நகல் |
| பி.சா.ஆ.25 | 03.08.1972 | புல எண்.6 ன் புல வரைபடம். | உண்மை நகல் |
| பி.சா.ஆ.26 | 03.08.1972 | புல எண்.2/1, 2, 3/1, 3, 6/2 க்கான பசல் 1419 க்கான அடங்கல் கணக்கு நகல். | உண்மை நகல் |
| பி.சா.ஆ.27 | 03.08.1972 | புல எண்.3 ன் புல வரைபடம். | உண்மை நகல் |
| பி.சா.ஆ.28 | 03.08.1972 | புல எண்.4 ன் புல வரைபடம். | உண்மை நகல் |
| பி.சா.ஆ.29 | 16.07.2010 | புல எண்கள்.3/1, 3, 5, 4/1, 2, 5, 12, 17 க்கான 'அ' பதிவேடு. | கணினி நகல் |
| பி.சா.ஆ.30 | 06.10.2025 | பெரியண கவுண்டர் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது. | கணினி நகல் |

-

<u>சாட்சியப் பட்டியல்</u>

<u>வாதி தரப்பில்:</u>
வா.சா.1-மணி (எ) விஜயபுரி
வா.சா.2-ஈஸ்வரன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில்:</u>
பி.சா.1–தனலட்சுமி.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.23 19:27:15 +0530
மு.கூ.மா.நீ., ஈரோடு.

<u>அசல்/வரைவு பொது தீர்ப்புரை</u>
<u>அ.வ.எண்.19/2018</u>
மற்றும்
அ.வ.எண்.306/2019
நாள் 23.03.2026
மு.கூ.மா.நீ.ம., ஈரோடு.